விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 05 வெள்ளிக்கிழமை (21.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 277

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# பிரணாப், மன்மோகனுடன் மகிந்த டில்லியில் சந்திப்பு

## இனப்பிரச்சினைத் தீர்வை விரைவுபடுத்துமாறு இந்தியா அழுத்தம்

*(புதுடில்லி)*, தமிழகக் கட்சிகளின் கடும் எதிர்ப்பின் மத்தியில் 3 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி மற்றும் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோரை நேற்று வியாழக்கிழமை மாலை சந்தித்துள்ளார்.

இதன்போது பல தசாப்த காலமாக நீடித்துச் செல்லும் இனப்பிரச்சினைத் தீர்வை விரைவுபடுத்துமாறு இந்தியா வலியுறுத்தியுள்ளது. *(20ஆம் பக்கம் பார்க்க)*





## மகிந்தவின் வருகையை எதிர்த்து தமிழகத்தில் ரயில் மறியல்

### 2000 இற்கு மேற்பட்டோர் கைது

(சென்னை)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய வருகையை எதிர்த்து, தமிழக அரசியல் கட்சிகள் நேற்று பரவலாக ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டன. இதன்போது 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராட்டக்காரர்களை கைது செய்துள்ளதாக தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி திருச்சி, ஸ்ரீரங்கத்தில் பயணிகள் ரயிலை மறித்து போராட்டம் நடத்திய வேளை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேல்முருகன் தலைமையில், காஞ்சிபுரத்தில் ரயில் மறியலுக்கு முயன்ற தமிழக வாழ்வுரிமைக் கட்சியினைச் சேர்ந்த 2000 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் கரூரில் ரயிலை மறிக்க முயன்றவர்கள் கைது செய்யப்பட்டனர். இதன்போது ராஜபக்ஷவுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பி வந்த 50 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் தலைமையில் 2 ஆயிரம் பேர் நேற்று கடலூர் ரயில் நிலையத்திற்கு சென்று மறியலில் ஈடுபட்டனர்

இந்த ரயில் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## மிகச் சவாலான பயணத்தையே ராஜபக்ஷ மேற்கொண்டுள்ளார்!

### இந்து நாளேடு விமர்சனம்

(சென்னை)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிகவும் சவாலான இந்தியப் பயணத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளதாக இந்து நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதி இந்தியப் பயணத்தின் போது, இலங்கையின் பழைய நண்பரான இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியையும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்திக்கிறார்.

ஆனால், முன்னதாக ராஜபக்ஷ சாஞ்சியில் பௌத்த பல்கலைக்கழக நிகழ்வில் மட்டுமே கலந்துகொள்வதாக இருந்தது.

எனினும் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## சாஞ்சியில் பௌத்த பல்கலைக்கு ஜனாதிபதி மகிந்த இன்று அடிக்கல்

### எதிர்ப்பை வெளியிட வைகோ போராட்டம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பேராட்டம் நடத்தச் சென்ற மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, மத்திய பிரதேச எல்லையில் தொண்டர்களுடன் தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் இரவில் இருந்து தரையில் அமர்ந்து தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றார்.

மத்திய பிரதேச மாநிலம், ராய்சென் மாவட்டம் சாஞ்சியில் புத்த மற்றும் இந்திய அறிவு சார் கல்வி பல்கலைக்கழகம் அமைக்கப்பட உள்ளது. சுமார் ரூபாய் 200 கோடி செலவில் அமைய உள்ள இந்த பல்கலைக்கழகத்துக்கான அடிக்கல் நாட்டு விழா இன்று நடை பெறுகிறது.

இவ் விழாவில் கலந்துகொள்ள ராஜபக்ஷ இன்று சாஞ்சிக்கு செல்கிறார். இந்நிலையில் மகிந்த வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து விழா நடக்கும் சாஞ்சியில் போராட்டம் நடத்தப்படும் என்று வைகோ அறிவித்துள்ளார்.

ஆனால், வைகோவும் அவருடன் சென்ற சுமார் ஆயிரம் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## முல்லைத்தீவில் இன்று கவனயீர்ப்பு போராட்டம்

முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபுலவு கிராம மக்களை சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தக் கோரி இன்று நண்பகல் 12.00 மணி தொடக்கம் 2.00 மணிவரை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கவனயீர்ப்பு போராட்டம் திட்டமிட்டபடி *(20ஆம் பக்கம் பார்க்க)*

## குடிநீர் விநியோகத்திற்கு ரூ.10 லட்சம் தேவை!

(யாழ்ப்பாணம்)

வேலணையில் குடிநீர் விநியோகத்திற்காக மாதம் ஒன்றுக்கு 10 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயிற்கு மேல் தேவைப்படுகிறது என யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

தீவகப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் உள்ள மக்களின் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## கூட்டமைப்பு—ஐ.நா குழு நேற்று சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஆசியாவுக்கான களச்செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு பிரிவின் தலைவரான ஹானி மெகாலி மற்றும் அவரது அணியின் அங்கத்தவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

ஐ.நா. வதிவிட இணைப்பாளர் சுபினே நந்தியின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கல நாதன், பி.செல்வராஜா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

பாதுகாப்பு வலயங்கள் குறிப்பாக வலிகாமம், சம்பூர் பிரதேசங்களில் பிரகடனப்படுத்தப்பட்டு மக்களை மீளகுடியேறவிடாது தடுத்தல், அவர்களின் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## யாழின் தொழில் விருத்திக்கு யு.எஸ்.எயிட் உதவ தயார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தொழில்துறையை விருத்தி செய்வதற்கு யு.எஸ்.எயிட் முன்வந்துள்ளது என யாழ்ப்பாணம் வர்த்தக தொழில் துறை மன்றத்தின் தலைவர் க.பூரணச்சந்திரன் தெரிவித்தார்.

குடாநாட்டில் புதிய தொழிற்சாலைகளை அமைக்கவும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்கவும் வெளிநாட்டவர்கள் முன்வந்துள்ளனர்.

கடந்த 18-ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜே.சிசன் என்னுடன் கலந்துரையாடியபோது இங்குள்ள தொழில்துறைகளை விருத்தி செய்வதோடு *(20ஆம் பக்கம் பார்க்க)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவியும் பொலித்தீன்களால் கதறுகிறது கல்லுண்டாய்வெளி

## கவனம் எடுக்க மக்கள் கோரிக்கை



(நவாலி)

நவாலி கல்லுண்டாய் வெளியில் கொட்டப்படும் கழிவுகளில் இருந்து காற்றினால் அடித்துச் செல்லப்படும் பொலித்தீன் பைகளினால் அப்பகுதி மாசடைவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் மாநகர சபையினரால் வாகனங்களில் கொண்டு வந்து குவிக்கப்படும் கழிவுகளில் காணப்படும் பொலித்தீன் பைகள் அயலில் காணப்படும் வயல்வெளிகளிலும் வீடுகளிலும் காற்றுக்கு அடித்துச் செல்லப்பட்டு ஆங்காங்கே பரவிக்காணப்படுவதாக கூறப்படுகிறது.

இதனால் மண் வளமும் பாதிப்படைவதாகவும், சில இடங்களில் அவை புதைந்து காணப்படுவதால் வயலை உழுது பண்படுத்தும் போது சிரமம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அப்பகுதியில் மேய்ச்சலுக்கு வரும் கால்நடைகள் இதனை உட்கொள்வதால் நோய்த் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. அத்துடன் சில கால்நடைகள் இறக்கவும் நேரிடுகிறது.

அத்தோடு இங்கு கழிவுகளுக்கு எரியூட்டப்படும் புகையினால் அவ்வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள மக்கள் தொடர்ந்து எரியூட்டப்படும் புகையினை சுவாசிப்பதால் சுவாசம் தொடர்பான நோய் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இப்பிரச்சினை தொடர்பாக நவாலி பிரதேசத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்கள், சமூக பிரதிநிதிகள், அதிகாரிகள் ஆகியோர்களுடன் கதைத்தும் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மக்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனவே இவ்வெளியில் கொட்டப்படும் கழிவுகளில் இருந்த காற்றிற்கு அள்ளிச் செல்லப்படும் பொலித்தீன் பைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடுதல் கவனமெடுத்து தூய்மையைப் பேணுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ந-2,26)

# மின்தடை பற்றிய செய்தி

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர முத்த மற்றும் தாழ் அமுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம்மாற்றம் செய்யவதற்காகவும் புதிய உயரமுத்த மின் மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை5.30 மணி வரையும் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, பளை வரையான தென்மராட்சிப்பிரதேசம், அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், சுன்னாகம், மல்லாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, தெல்லிப்பளை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, புத்தூர், ஆவரங்கால், வாதரவத்தை, வீரவாணி, இணுவில், மருதனார்மடம், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன் மணல் பிரதேசம், குருநகர், பாசையூர், பிரதான வீதி, கொன்வன் பிரதேசம், நெல்லியடி நகரத்தின் வடக்குப்பகுதி, வதிரிப்பிரதேசம், அல்வாய் மேற்கு, திக்கம் ஆகிய இடங்களிலும்

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5.30 மணி வரையிலும்

கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, பளை வரையான தென்மராட்சிப் பிரதேசம், புத்தூர், ஆவரங்கால், வாதரவத்தை வீரவாணி, உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், யாழ் மாநகர சபைப் பகுதி, யாழ் பட்டணப்பகுதி ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோம்பயன்மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கை தீவு, கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், மந்திகை, சாரையடி, தம்பசிட்டிப் பிரதேசத்தின் ஒருபகுதி, பருத்தித்துறை நகரப்பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ் பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந-8)

# திருட்டுச் சம்பவம்

வடமராட்சி நெல்லியடி முடற்சாட்டுப் பகுதியில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ. சீனிவாசன் என்பவரது வீட்டிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் சுவாமி அறையின் ஊடாக ஓட்டைப்பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அங்கு பொருட்கள் எதுவும் கிடைக்காத நிலையில் 5 ஆயிரம் ரூபா பணத்தினை திருடிச் சென்றுள்ளனர். இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகிறார்கள். (ந-24)


அனைத்து நோய்களிலிருந்தும் விடுதலை பெற
உலகப் பிரசித்திபெற்ற செவிவழி தொடு சிகிச்சை
**நிபுணர் ஹீலர் பாஸ்கர்**
அவர்களின் அனாடமிக் செவிவழி தொடு சிகிச்சை விளக்கமும் பயிற்சிப் பட்டறையும்
**மருத்துவ முகாம்**
(சுயசிகிச்சைக் கலை)



இடம் : ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம், 345, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
காலம் : 23.09.2012 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 முதல் மாலை 4.00 மணிவரை மதிய உணவு நேரம் 12.00 - 12.30 வரை மதிய உணவு வழங்கப்படும்
செயல் விளக்கம் : ஹீலர் பாஸ்கர்
இந்நிகழ்வில் கலந்துகொண்டு அனைவரையும் நலமுடன் வாழ அழைக்கின்றோம்.
மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்களே இருப்பதனால் உங்கள் ஆசனங்களை முன்பதிவு செய்து கொள்ளவும்.
தொடர்புகளுக்கு : 021 2221413, 077 7821896, 075 5979432, 071 1250365, 072 6011512.
(475)


# யாழில் மாற்றுவலுவுடையோராக 7ஆயிரத்து 820 பேர் உள்ளனர்

## சமூக சேவைகள் திணைக்களம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் 7 ஆயிரத்து 820 பேர் மாற்று வலுவுடையவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என சமூக சேவைகள் திணைக்கள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 4 ஆயிரத்து 517 பேர் ஆண்களும் 3 ஆயிரத்து 303 பேர் பெண்கள்.

கடந்த கால யுத்தம் காரணமாகவே இதில் பலர் மாற்றுவலுவடையவர்களாக மாற்றப்பட்டுள்ளனர் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-6)

# சுழற்சி முறையிலான வைத்திய சேவை

(யாழ்ப்பாணம்)

தற்போது நிலவுகின்ற வைத்தியர்கள் பற்றாக்குறையினால் தீவகப் பிரதேச வைத்தியசாலைகளுக்கு வைத்திய சேவையை மேற்கொள்வதற்காக யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய உத்தியோகத்தர்கள் வாரத்தில் திங்கள், வியாழன் ஆகிய இரு தினங்களில் சுழற்சி முறையிலான ஒரு சேவையை மேற்கொள்ளவுள்ளனர்.

இதன் பிரகாரம் முதற்கட்டமாக முதல் வாரத்தில் நயினாதீவு பிரதேச வைத்தியசாலையிலிருந்து இச்சேவைகள் ஆரம்பிக்கப்படும்.

எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இவ்வைத்தியசேவை நயினாதீவு பிரதேச வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டு வாரத்தில் திங்கள், வியாழன் ஆகிய இரு தினங்களில் சுழற்சி முறையில் இடம்பெற விருப்பதனால் பொதுமக்கள் இச்சேவையை பெற்றுக் கொள்ளமுடியும் என யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ந-8)

# அஷ்டலக்ஷ்மி பூஜையும் நயன தீக்ஷையும்

ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவான் அனுக்ரக அஷ்டலக்ஷ்மி பூஜையும், பகவானின் நயன தீக்ஷையும் நாளை சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு கொக்குவில் சற்சங்க நிலையம் வேதநாயகி இல்லத்திலும், யாழ்ப்பாண சற்சங்க நிலையத்திலும், இல.815, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவில் மண்டபத்திலும் நடைபெறும்.

தொடர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் இந்நிகழ்வு 03.11.2012 வரை நடைபெறவுள்ளது.

பக்தர்கள் இந்நிகழ்வில் கலந்து அருள் பெறுமாறு யாழ்ப்பாண சற்சங்க ஒன்றியம் கேட்டுள்ளது. (ந-8)

# அஷ்டலக்ஷ்மி பூஜை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை ஸ்ரீ அம்மா பகவான் அஷ்டலக்ஷ்மி பூஜை நடைபெறவுள்ளது.

இப்பூஜையானது வாரம் தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறுவதுடன் தொடர்ந்து ஏழு சனிக்கிழமைகள் நடைபெறும்.

பக்தர்கள் கலசம், அட்சதை, பூ, குங்குமம் போன்றவற்றுடன் இப்பூஜையில் கலந்து கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)

# தமிழ் - முஸ்லிம் உறவுப் பாலம் இறுதி நேரத்தில் கானல் நீரானது

## கிழக்கு குறித்து ஜ.ம.முன்னணி விசனம்

நடந்து முடிந்த கிழக்கு மாகாணத் தேர்தல் கட்சிக்கூட்டு முடிபானது கடந்த பல தசாப்த கால தமிழ், முஸ்லிம் இனத்துடனான புரிந்துணர்வின்மையை நிவர்த்தி செய்வதற்கான இறுதிச் சந்தர்ப்பம் கானல் நீரானது, சகிக்க முடியாத துன்பத்தையும் வேதனையையும் தருவதாக ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி.பாஸ்க்கரா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுடன் சங்கமித்து வாழ்ந்த முஸ்லிம் இனத்தவர்கள் கடந்த காலங்களில் தமிழ்த் தேசிய போராட்டத்திலும் ஒன்றாகவே பயணித்து வந்ததை மறந்து விடமுடியாது. காலப்போக்கில் விரும்பியோ, விரும்பாமலோ அரசியல் பிறழ்வுகள் காரணமாகவும் சமூக அந்தஸ்து பெறும் நோக்குடன் செயற்பட்ட அரசியல் குரோதத் தலைவர்கள் காரணமாகவும் பாரிய பிளவுகளும் இனமோதல்களும் இடம்பெற்றதை மறுப்பதற்கில்லை. அவை தொடர்ந்த தசாப்த காலத்தில் போர் முடிந்த மூன்று வருடங்களில் தமிழ்,முஸ்லிம் மக்கள் ஓர் குடையின் கீழ் பயணிப்பதை மிகவும் பெரும்பாலான மக்கள் விரும்பிய நேரத்தில் இத் தேர்தல் நடைபெற்றது. பலரும் ஒற்றுமைக்கான தேர்தல் களமாகவே தமிழ், முஸ்லிம் மக்கள் பார்த்தனர். அதற்கமையவே மக்கள் தத்தமது சமூகத் தைச் சார்ந்த பிரதி நிதியை தெரிவு செய்தனர்.

இவ்வேளையில் மக்கள் எதிர்பார்ப்புக்கமைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மேடையில், இத் தேர்தலில் தனித்து நிற்பதால் தான் முது கெலும்புடன் பேச முடிபதாக கொழும்பு தமிழ்ச் சங்கத்திலும் தமது இனத்தின் மீது நடத்தும் அடாவடித்தனத்துக்கு எதிராகவே தான் பேசுவதாகவும், பல தியாகங்களைத் தான் செய்வதாகவும், சம்மாந்துறை பிரதான வீதி பிரசாரத்திலும் கூறியிருந்தார்.

அமைச்சர் இப்படிக் கூறியதன் காரணத்தால் முஸ்லிம் மக்கள் கமகு சமகம் சார்ந்த முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளரையும் தமிழ் மக்கள் தமது சமூகம் சார்ந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களையும் தத்தமது தெரிவாக எடுத்துக்கொண்டு இரு சமூகங்களும் தமது வடகிழக்கின் இரு கட்சிகளுக்கும் தமது வாக்கை வழங்கி இரு கட்சிகளும் சேர்ந்து ஆட்சியமைப்பதற்கான தமது தீர்ப்பை கிழக்கு மக்கள் வழங்கினர்.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் அவர்களை ஏமாற்றிவிட்டது. இலங்கையில் தீர்வே எட்டாக் கனியாக உள்ளவேளையில் அரசியல் தலைமை மக்களின் விருப்பத்திற்கு மாறாகச் செயற்படுவதானது மக்களின் ஒற்றுமைக்கு ஏற்படும் பேரிடியாக பார்க்க முடிகின்றது.

அரசியல் கட்சித்தலைமை தமது கட்சிக் கோட்பாடுகளுக்கு ஏற்ப முடிவெடுப்பது என்பது அவர்களின் சுதந்திரம். அதில் நாம் தலையிட விரும்பாத போதும் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமை காலத்தின் தேவையாகும் என்றார். (ந-11)


YAALH ENGLISH ACADEMY
வழங்கும்
'EASY ENGLISH'
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
விபரங்கள் + பெயர் பதிவு : 773 212 711 மூலம்

செல்லா சினிமா - யாழ்ப்பாணம்
இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு
ஜீவா, பூஜாஹெக்டே, நரேன் நடித்த



10.30, 2.30, 6.30, 9.30 DTS
(C-941)


# கடலில் விழுந்தவரை காணவில்லை

வடமராட்சி கடலில் தவறி விழுந்த ஒருவரை 3 நாட்களாகியும் காணவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கடலில் கடந்த திங்கட்கிழமை 4 மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். செவ்வாய்க்கிழமை அதிகாலை இவர்கள் திரும்பும் வழியில் ஒருவர் தவறி கடலில் வீழ்ந்துள்ளார்.

இவரை நேற்றுவரை தேடும்பணியில் கடற்படையினரும் அப்பகுதி மீனவர்களும் ஈடுபட்டும் இவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

பருத்தித்துறை கம்பர்மடம் பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான தியாகராசா தேவராசா (வயது 43) என்பவரே தவறி விழுந்தவர் ஆவார். (ந-24)

# யெகோவாவின் சாட்சிகளின் மாநாடு

யெகோவாவின் சாட்சிகளின் மாவட்ட மாநாடு நாளை, நாளை மறுதினம், 23ஆம் திகதி ஆகிய தினங்களில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9.20 தொடக்கம் வெள்ளி, சனிக்கிழமைகளில் பி.ப. 4.55 வரையும், ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.40 மணிவரையும் நடைபெறவுள்ளது. இதில் பல முக்கிய பேச்சுக்கள் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வாழ்வின் பொருள்

ஒரு பெரிய பாராட்டு விழா நடந்து கொண்டிருந்தது. புகையிரத் திணைக்களத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவருக்குத்தான் அந்தப் பாராட்டு விழா நடத்தப்படுகிறது.

அதுவும் சாதாரண தொழிலாளியாக வேலை செய்து கொண்டிருந்த ஒருவருக்கே அந்தப் பாராட்டு விழா. பல முக்கியமான பிரமுகர்கள் வரவழைக்கப்பட்டிருந்தார்கள் அந்த விழாவில் உரை நிகழ்த்துவதற்காக...

அந்தத் தொழிலாளி அன்றைய தினம்தான் ஓய்வு பெறுகிறார் தனது தொழில் இருந்து...

இருந்தாலும் எல்லோருக்கும் இந்த அளவிற்கு விழா நடத்தப்படமாட்டாது.

ஆனால், இவருக்குத் தடல்புடலாக நடக்கிறது. அது ஏன்?

என்ன காரணம் என்று அவரைப் பற்றி பல பேர் உரை நிகழ்த்தும் போதுதான் புரிந்தது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் உரை நிகழ்த்துகையில்;

"இன்றைய தினம் பதவியில் இருந்து ஓய்வு பெறுகிற இந்தப் பெரியவர்; தன்னுடைய கடமையிலே கண்ணாக இருந்தவர். கடமையில் இருந்து அவர் தவறியதே இல்லை. இந்தப் பதவியில் எப்போது இணைந்தாரோ அன்றிலிருந்து அவர் ஒரு நாள்கூட "லீவு" எடுத்தது கிடையாது. இது ஒரு பெரிய "சாதனை" என்றார்.

இன்னொரு விருந்தினர் உரை நிகழ்த்துகையில்;

"இவர் இந்த வேலையிலே எப்போது இணைந்தாரோ அப்படியே கடைசி வரைக்கும் இருந்து விட்டு ஓய்வு பெற்று செல்கிறார். வாழ்நாளிலே அவருக்கு ஒரு சிறிய பதவியுயர்வு கூட கிடைக்கவில்லை; அப்படி இருந்தும் அவர் மனம் சலிப்படையவில்லை. தளர்ச்சியடையவில்லை. தொடர்ந்து பணிக்கு சமுகமளித்தார். தன் கடமையை செய்தார்.

தினமும் புகையிரத நிலையத்திற்கு வருவார். கையிலே ஒரு சுத்தியலோ அல்லது இரும்புத்துண்டோ ஏதாவது ஒன்றை வைத்திருப்பார். இதை கையிலே வைத்துக்கொண்டு புகையிரத பிளாட்போமில் நிற்பார். புகையிரத வண்டி வந்து நிற்கும். இவர் தனது கடமையைச் செய்வார். அதாவது "எஞ்சினில்" ஆரம்பித்து ஒவ்வொரு பெட்டியாக சரி பார்த்து வருவார்.

ஒரு பெட்டியும் இன்னொரு பெட்டியும் இணையும் இடத்தில் கையிலே உள்ள சுத்திய்லாலே இரண்டு தட்டு தட்டுவர். மறுபடியும் வருவார். அடுத்த பெட்டிக்குப் போவார். சுத்தியலாலே இரண்டு தட்டு தட்டுவார். இப்படியாக கடைசி வரை உள்ள பெட்டி மட்டும் தட்டுவார். இந்த வேலையை அவர் கடைசி வரைக்கும் தவறாமல் செய்து முடித்தார். அதனால்தான் அவருக்கு இந்த பாராட்டு விழா நடத்தப்படுகிறது என்று கூறி முடித்தார்.

பல பேர் பரிசு வழங்கினார்கள்; பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்; பாராட்டுப் பத்திரம் வாசித்தார்கள்.

அனைத்தையும் பெற்ற நிலையில், கடைசியாக அவர் நன்றி தெரிவித்து உரை நிகழ்த்தினார்.

"எல்லோரும் என்னை அளவுக்கு அதிகமாகப் புகழ்ந்து பேசினார்கள். ஏதோ எனது கடமையைச் செய்தேன். அதற்கு எனக்கு அரசாங்கம் சம்பளம் மாதா மாதம் வழங்கியது. இன்றைய தினம் ஓய்வு பெறுகிறேன். அவ்வளவுதான்; இதற்கு எல்லாம் இப்படியான விழா ஏற்பாடு செய்யத் தேவையில்லை. ஆனாலும் இந்தக் கடைசி நேரத்திலே ஒரு சந்தேகத்தை உங்களிடம் சொல்லிவிட்டு விடைபெற நினைக்கிறேன்.

"இவ்வளவு வருடமாக கடமை தவறாமல் வேலை செய்தேன்– உண்மைதான். ஒவ்வொரு புகையிரதத்திலேயும் ஒவ்வொரு பெட்டியாகத் தவறாமல் போய் தட்டினேன். ஏன் அப்படி செய்தேன் என்பது இந்த நிமிடம் வரைக்கும் எனக்குத் தெரியாதுள்ளது. தட்டச் சொன்னார்கள் தட்டினேன்" என்றார்.

எப்படி இருக்கிறது இது! இக்கதை யாருக்கு சொல்லப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறீர்களா?

ஏன் வாழ்கிறோம் என்று தெரியாமல் இந்த உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற சில பேர் உள்ளனர்; அவர்களுக்காக கூறப்பட்டுள்ளது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 287 வரையான குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் கூட இல்லை

## வள்ளிபுனம் கிராமத்தின் அவலம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வள்ளிபுனம் கிராம மக்கள் பல்வேறுபட்ட தேவைகளுடன் சொல்லொணா துயரத்தை அனுபவித்து வருகின்றனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மேற்குறித்த கிராமத்தில் உள்ள 542 குடும்பங்களில் 287 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் கூட வழங்கப்படவில்லை.

இங்கு நிரந்தரமாக இருந்த 36 வீடுகள் போரினால் சேதமடைந்த நிலையில் புனரமைக்கப்படாது உள்ளது. இங்குள்ள 100 குடும்பங்களுக்கு நிரந்தர காணிகள் இல்லை. 50 குடும்பங்களுக்கு மட்டுமே கிணறு, மலசல கூடம் என்பன உண்டு. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இங்குள்ள 11 உள் வீதிகள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

இங்குள்ள கோயில்கள் போரினால் அழிவுற்று புனரமைக்கப்படாத நிலையில் உள்ளது. இங்கு 100 இற்கு மேற்பட்ட முன்னாள் போராளிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

இங்கு 90 வீதமானவர்கள் கஷ்டத்தை அனுபவிப்பவர்களாகவும் சமுர்த்தி உதவி கூட இல்லாத நிலையிலும் உள்ளனர். கூடுதலாக விதவைகளும் கூலி வேலை செய்வோருமே இத்தகைய துன்பங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு தமது அவல நிலையை போக்க முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-267)

# பண்ணையாளர்களை ஊக்குவிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பாற்பண்ணையாளர்களை அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த கூடிய வகையில் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ்.திருநெல்வேலியில் அமைந் துள்ள யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவு சங்க மண்டபத்தில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் அமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது பாற்பண்ணையாளர்கள் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் மற்றும் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் அது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

அத்துடன் அவர்களது ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து துறைசார்ந்தோர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதிபட குறிப்பிட்டார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 120 | 70 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 60 |
| தக்காளி | 30 | 30 | 60 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 30 | 40 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 100 | 100 | 120 |
| பூசணி | 40 | 30 | 50 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 45 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 40 | 60 |
| பாகற்காய் | 70 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 45 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 65 | 60 | 90 |
| பயற்றங்காய் | 70 | 60 | 70 |
| லீக்ஸ் | 90 | 110 | 100 |
| பீற்றூட் | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 90 | 70 | 90 |
| முருங்கைக்காய் | 30 | 20-40 | 50 |
| போஞ்சி | 70 | 90 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 100 | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 290 | 260 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 30 | 25 |

# இராசி பலன்

*21.09.2012*
*(புரட்டாதி 05, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*
*சஷ்டி முன்னிரவு 8.05 மணிவரை*
*அனுசம் முன்னிரவு 8.18 மணிவரை*
*இராகுகாலம் 10.32-12.02 மணிவரை*
*சுபநேரம் 6.02-7.32 மணிவரை*
*சஷ்டி விரதம்.*

**மேடம்** அம்பிகை வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, வேலைச்சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை.

**இடபம்** நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், கந்தன் வழிபாடு மனதில் புத்துணர்வு கொடுக்கும், செய்தொழிலில் மேன்மையுண்டு, களஸ்திர நன்மையுண்டு, கௌரவமான நாள்.

**மிதுனம்** உற்சாகமாகப் பணி புரியும் நாள், ஆரோக்கியம் சீராகும், மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வியாபார விருத்தியுண்டு, திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தனவரவு திருப்திகரமாக அமையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், வாகன சுகமுண்டு.

**கன்னி** மறக்க முடியாத சில சம்பவங்கள் நடைபெறலாம், உயர்வான சிந்தனைகள் மனதில் குடி கொள்ளும், எப்படி நடக்கலாம் என நினைத்த காரியமொன்று நல்லபடியாக நடைபெறலாம்.

**துலாம்** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், தொழில் வளர்ச்சி அதிகரிக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், அரசியல்வாதிகளால் நன்மையுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும், உறவினர் பகை அகலும்.

**தனுசு** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, உறவினர் நலன் கருதி சில செலவுகள் ஏற்படலாம், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புகள் உண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கும்பம்** அருமையான நாள், அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், செய்தொழிலில் மேன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்கள் நல்லபடியாக நடைபெறலாம்.

**மீனம்** தடைகள் விலகி தனவரவுகள் பெருகும் நாள், தேக நலன் சீராகும், எதிர்பாராத பயணங்களால் ஆதாயமுண்டு, விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், ஆன்றோர் சந்திப்புண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தில் இருக்கும்போது மக்களுக்கு சிறந்த சேவையாற்ற வேண்டும்

## சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

உத்தியோகத்தில் இருக்கும்போது மக்களின் தேவைகள் உணரப்படுவதில்லை. ஓய்வு பெற்ற பின்பு மக்களின் தேவைகளை நினைத்து வருத்தப்படுகின்றனர்.

எம்மாலான உதவிகளை உத்தியோகத்தில் இருக்கும் போதே மக்களுக்கு செய்ய வேண்டும் என யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபரும் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளருமான திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் மாற்றுவலுவுடையோருக்கான உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்று நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் இடம்பெற்ற நீண்டகால யுத்தம் காரணமாக பலர் அங்கவீனமுற்றுள்ளனர். அவர்கள் மன ரீதியாக அழுத்தங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். மாற்றுத்திறனாளிகளின் திறமைகளை இனம்கண்டு புதிய வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

மாற்றுத் திறனாளிகளின் திறமைகள் மழுங்கடிக்கப்படக்கூடாது. பிறரிடம் தங்கி வாழ்கின்றோம் என்ற உணர்வு அவர்களிடம் ஏற்படாமல் சுயதொழில் செய்து வாழக்கூடிய உதவிகளை செய்து கொடுக்க வேண்டும். நான் அறிந்த வரை பல மாற்றுத்திறனாளிகள் கைப்பனிப்பொருட்கள் உற்பத்தி செய்வதில் வல்லவர்கள்.

மேலும் வடக்கு, கிழக்கில் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகளை கோரி விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை மிகவும் குறைவு. இதுதவிர பல திட்டங்கள் இந்தப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்படவில்லை. அதனை சரிவர செயற்படுத்த அதிகாரிகள் இல்லை என்பதை செயலாளர் பதவி ஏற்ற பின்பு அறிந்து கொண்டேன்.

இந்த மாவட்டத்தில் அரச அதிபராக இருந்த போது நான் கூட அதை செயற்படுத்த தவறிவிட்டேன். அதிகாரத்தில் இருக்கும் போது உத்தியோகத்தர்கள் மக்களின் தேவைகளை உணர்ந்து கொள்வதில்லை. ஓய்வு பெற்ற பின்னரே அதைப்பற்றி நினைத்து வருத்தப்படுகின்றனர்.

மாற்று வலுவுடையோர்களின் நலன் கருதி உரிய காலத்தில் தேவைகளை இலகுவாக பெற்றுக்கொள்ள மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் அரச திணைக்களங்கள் உதவ வேண்டும். புதிய அலுவலகங்கள் அமைக்கப்படும் போது மாற்று வலுவுடையோர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும்.

மேலும் மாற்றுவலுவுடையோர்களுக்கு உளநல மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுக்கவும் நாம் தயாராகவுள்ளோம். எனவே, மாற்றுவலுவுடையோர்களுக்கு செய்யும் பணி இறைவனுக்கு செய்யும் பணிக்கு ஒப்பானது என்பதை உத்தியோகத்தர்கள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சின் மேலதிக செயலாளர் கிருஸ்ரி, யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ-6)

## தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தான மஹோற்சவ காலங்களில் தினமும் இரவு 7.30 மணிக்கு தெய்வீகப் பேருரைகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இத்தெய்வீக பேருரையில் இன்று வெள்ளிக்கிழமை **செஞ்சோற்றுக்கடன் தீர்த்தவர்கள்** எனும் தலைப்பில் யாழ்ப்பாண பிரதேச செயலக சமுர்த்தி அலுவலர் ரி.கருணாகரன் சொற்பொழிவாற்றவுள்ளார். (அ-9)

# சாவகச்சேரி நகர சபையால் அல்லாரைக்குளம் புனரமைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கல்வயல் அல்லாரைக்குளம் சாவகச்சேரி நகர சபையினரால் புனரமைக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியால் நீர்நிலைகள் வற்றி கால்நடைகள் நீரின்றி அலைவதாக மக்கள் முறைப்பாடு செய்ததையடுத்து நகர சபை உறுப்பினர் ந.திருக்குமரன், சபையின் உபதவிசாளர் கு.சதாசிவமூர்த்தியின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

அதையடுத்து உப தவிசாளரின் முயற்சியால் மேற்படி குளம் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டது.

தற்போது குளத்தில் காணப்படும் நீரை பெரும் எண்ணிக்கையான கால்நடைகள் குடிக்கச் செல்வதாக கூறப்படுகிறது.

அதேவேளை சபை உறுப்பினர் கா.சற்குணதேவன் தெரிவித்த முறைப்பாட்டினை அடுத்து கற்குழி பகுதியில் நீண்டகாலம் பாவனை இன்றி தூர்ந்துபோயிருந்த மழை வெள்ளம் பாய்ந்தோடும் வாய்க்காலும் புனரமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சாவகச்சேரி கண்ணாபிட்டி இந்துமயான அபிவிருத்தி தொடர்பாக இடம் பெற்ற கலந்துரையாடலில் மக்களால் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைய மேற்படி மயானம் புனரமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் காணப்படுகிறது.

மேற்படி சபையின் உதவியால் மயானம் புனரமைக்கப்பட்டுள்ளது. (அ-3-29)




## வளையாபதி நாட்டுக்கூத்து நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் வெளியிடப்பட்டும் நாட்டுக்கூத்து நூல்களின் வரிசையில் மற்றுமொரு புதிய வெளியீடாக கவிஞர் செ.அ.அழகராஜாவின் ஆக்கத்தில் உருவான **வளையாபதி** தென்மோடி நாட்டுக்கூத்து நூலின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணியும் சிறப்பு விருந்தினராக கலாபூஷணம் அண்ணாவியார் அ.பாலதாஸும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். நூலின் மதிப்பீட்டுரையை அருட்பணி செ.அன்புராசா அ.ம.தி. அடிகள் வழங்குவார். (அ)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வடக்கு மாகாண கல்வித்திணைக்களமும் ஜி ஐ இசற்/ இ எஸ் சி என்பன இணைந்து வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் கீழ் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் பாடசாலைகள், பயிற்சி நெறியை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் ஆகியோருக் கான வெற்றிக்கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது பல்கலாச்சாரத்தை சித்திரிக்கும் சுவரொட்டி, கவிதை, கண்காட்சிப் போட்டியில் வெற்றியீட்டிய 27 மாணவர்களுக்கும் மற்றும் பாதுகாப்பான பாடசாலை என்ற வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண கல்வித் திணைக்கள மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற 18 பாடசாலைகளுக்கும் வெற்றிக் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

அத்தோடு கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர் அல்லாத 92 ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. (அ-3-15)

## சாவ.சுகாதார பகுதியினரால்



# பாவனையற்ற கிணறுகளின் விபரம் சேகரிக்கப்படுகிறது

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்குநோய் நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நிலையில் உள்ள பாவனை அற்ற மற்றும் சேதமடைந்த கிணறுகள், நீர்நிலைகளது விபரங்களை உடனடியாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு எழுத்துமூலம் அறியத்தருமாறு சாவகச்சேரி சுகாதார பகுதியினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கொடுக்கப்படும் இவ்விபரங்களின் அடிப்படையில் கழிவுநீர் தேங்கும் நிலைகளுக்கு டெங்குநுளம்பு அழிப்பு உயிரியல் கொல்லி மருந்துகள் விசிறப்படும் என தெரிவிக்கப்படுகிறது. மேற்குறித்த நீர்நிலைகளால் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளதெனவும் பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட்டு தம்முடன் ஒத்துழைக்கும்படியும் சாவகச்சேரி சுகாதார பணிமனையினர் கேட்டுள்ளனர்.

அத்துடன் குடியிருப்பு இல்லாத வெற்றுக் காணிகளில் உள்ள கிணறு மற்றும் நீர் நிலைகள் பற்றிய விபரங்களையும் அறித் தருமாறும் அவர்கள் அறிவித்துள்ளனர். (அ-3-29)

சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்திலுள்ள மாற்றுவலுவுடையோர்களுக்கான உதவித்திட்டங்களை பிரதேச செயலர்கள் உரியமுறையில் நடைமுறைப்படுத்த வைக்கும் நோக்கில் பிரதேச செயலர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் யாழ்.மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபரும் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளருமான திருமதி இமெல்டா சுகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உரையாற்றுவதையும் ஏனைய விருந்தினர்கள் அருகில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் பங்கு கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளத்தை ஆழமாக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா குடியிருப்பு குளத்தினை தூர்வாரி அதிகளவான நீரினை சேமிப்பதற்கு நீர்ப்பாசன திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வவுனியா குளத்தின் கீழ் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

வவுனியாவில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக வவுனியா குளம் முழுமையாக வற்றியுள்ளது. இந்நிலையில் கடந்த போக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகள் பெரும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்திருந்தனர். இதற்கு குளத்தின் நீர் கொள்ளளவு குறைவே காரணமாகும் என தெரிவித்த விவசாயிகள் இக்குளத்தினை தூர்வாரி பல ஆண்டுகள் ஆகிவிட்டமையினால் சுமார் 6 அங்குலத்திற்கும் மேலாக மண் நிரம்பியுள்ளது. இது தொடர்ந்து வரும் காலத்தில் விவசாயிகளின் ஜீவனோபாய செயற்பாட்டில் பாரிய இடையூறுகளை ஏற்படுத்தும்.

எனவே, பல ஆண்டுகளுக்கு பின்னர் முழுமையாக குளம் வற்றியுள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நீர்ப்பாசன திணைக்களம் குளத்தினை தூர்வாருமாயின் பல விவசாயிகள் சிரமமின்றி விவசாயத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என தெரிவித்தனர். (அ-9-266)

## ஆசிரியர்களுக்கான போட்டி

(சிவநகர்)

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கிளி/வலய ஆசிரியர்களுக்கான இலக்கியப்போட்டியும் அழகியல் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இதனடிப்படையில் கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கிளி/புனித திரேசா மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அத்துடன் நடனம், நாடகம், பாடல் ஆகியன தனி, குழு நிகழ்வாகவும் எதிர்வரும் 30 ஆம் திகதி அதே பாடசாலையில் நடைபெறவுள்ளது. (அ-3-254)

YARL Taxi

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com

# கிடாச்சூரி வீதி புனரமைப்பு இடைநடுவில் கைவிடப்பட்டது

## மக்கள் அசௌகரியம்

(பூந்தோட்டம்)

வவுனியா தாண்டிக்குளம் சந்தியில் இருந்து கிடாச்சூரி மற்றும் பல கிராமங்களுக்கு செல்லும் வீதி திருத்தம் செய்யப்படுவதற்கு ஆவன செய்யப்பட்ட நிலையில் இடைநடுவில் விடப்பட்டுள்ளமையினால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாக தெரிவிக்கின்றனர்.

இப்பிரதான வீதி நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாத நிலையில் காணப்பட்ட போது மக்கள் பல அதிகாரிகளிடமும் முறையிட்ட நிலையில் அவ் வீதியை திருத்தம் செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த 5 மாதங்களுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் அப்பகுதி மக்கள் அவ்வீதியில் கற்கள் கொட்டப்பட்டு பயணிக்க முடியாது காணப்படுவதாகவும் அதனால் விபத்துக்கள் ஏற்படுவதுடன் பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, இவ் வீதியினால் மன்னார் மாவட்ட தனிமடு பிரதேசம் வரை பயணம் செய்யக் கூடியதாகவுள்ளமையினால் தற்போது அதிகளவான வாகனங்கள் அவ் வீதியை பயன்படுத்துவதாகக் கூறும் அப்பகுதி மக்கள் வீதி செப்பனிடப்படாமையினால் தூசு வீடுகளுக்குள் படிவதாகவும் பாடசாலை மாணவர்கள் வெள்ளையுடையுடன் பாடசாலைக்கு செல்ல முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக தாம் அரசாங்க அதிபர் முதல் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்த போதிலும் அவர்கள் அரசியல் காரணங்களைச் சுட்டிக் காட்டுவதாகவும் அது தொடர்பில் தாம் எதனையும் செய்ய முடியாதிருப்பதாக பொறுப்பற்ற விதத்தில் பதில் அளிப்பதாகவும் தெரிவித்தனர். (அ-266)

யாழ். மண்ணில் இலவச காது பரிசோதனை

உலக செவிப்புலனற்றோர் தினத்தை முன்னிட்டு கொழும்பிலிருந்து யாழ். மண்ணிற்கு வருகை தரும் விசேட குழுவினர் 22 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை ஜெ.எம்.விக்கிரமாராச்சி அன்ட் கம்பனியில் இலவசமாக காது பரிசோதனைகளை (audiogram (PTA), Tympanometry, Reflexometry, ABR, OAE) மேற்கொள்ளவுள்ளனர். இதில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

TGA TRÄGERGEMEINSCHAFT FÜR AKKREDITIERUNG
GERMAN ASSOCIATION FOR ACCREDITATION GMBH
wish
Cochlear™
LANKA COLLEGE OF AUDIOLOGY

தொடர்புகளுக்கு:
இல.229,231, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.0212219288,0777511260
(சி/1101)

SEP. 22,23 Saturday & Sunday

BBC சிறார்களின் MEGA
கல்வி, கலை கண்காட்சி

அனுமதி இலவசம்

யாழ் குடாநாட்டில் 10 வளாகங்களைக் கொண்டு இயங்கிவரும் பிரபல தனியார் ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலையும், விசேட ஆங்கிலக் கல்விக்கான வகுப்புக்களை நடாத்தி வரும் BBC இன் கல்வி, கலை கண்காட்சிக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : Rajathurai Block, யாழ் மத்திய கல்லூரி
திகதி : 22.09.2012 சனிக்கிழமை
23.09.2012 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.30 முதல் - மாலை 4.30 வரை

எமது சிறார்களின் கல்விச் செயற்பாடுகளைப் பார்வையிட்டு நீங்களும் பயன் பெறுங்கள்.

(444)

British Business College
BRITISH BUSINESS COLLEGE
140, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel:021 222 5796, 077 362 7055
Where Students Come First

கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மிருகசீரிடம் 3<br>உயரம்:-5'7.5"<br>கி.பா:-24.5<br>தொழில்:-சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>B/446 | பிறப்பு:- 1992. இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ஆயிலியம் 2<br>உயரம்: 5'2"<br>கி.பா:-70, 8 இல் செவ்வாய்<br>தொழில்:- நோர்வே PR இல்லை<br>G/506 |
| பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அத்தம் 2<br>உயரம்:-6'1"<br>கி.பா:-42<br>தொழில்:-நெற்வேக் இன்ஜினியர்<br>U.Kவேக் பெமிற்<br>B/448 | பிறப்பு:- 1984 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்:- பூரட்டாதி 3<br>உயரம்: 5'1"<br>கி.பா:-11.75, 12 இல் செவ்வாய்<br>விவாகரத்து பெற்றவர் விவாகரத்தானவர்களும் விண்ணப்பிக்கலாம்<br>G/468 |
| பிறப்பு:-1974 இந்து<br>நட்சத்திரம்:-திருவாதிரை 4<br>உயரம்:-5'9"<br>கி.பா:-21.75,4 இல் செவ்வாய்<br>தொழில்:-கால்நடை வைத்தியர்<br>B/449 | பிறப்பு:- 1971 இந்து<br>நட்சத்திரம்:- பரணி 3<br>உயரம்: 5'4"<br>கி.பா:- 24.75, 12 இல் செவ்வாய்<br>தொழில்:- O/L கணனி அறிவு, எழுதி விவாகரத்தானவர்களும் தொடர்பு கொள்ளலாம்<br>G/428 |
| பிறப்பு:- 1953 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூராடம்<br>உயரம்:-5'6"<br>தொழில்:-அவுஸ்திரேலியா,PR (விவாகரத்தானவர்)<br>B/450 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ஆயிலியம் 1<br>உயரம்: 5'4"<br>கி.பா:- 31.75<br>தொழில்:- அரச முகாமைத்துவ உதவியாளர்<br>G/014 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் இராணுவ பிரசன்னம் குறையவில்லை

## த ஹிந்து நாளேடு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இராணுவ பிரசன்னம் குறையவில்லை என்று த ஹிந்து பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

படிப்படியாக இராணுவத்தினரின் எண்ணிக்கை வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து குறைக்கப்படுவதாக கூறப்படுகின்ற போதும் அதில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மொத்தமாக உள்ள 19 இராணுவப் பிரிவுகளில் 16 பிரிவுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே நிலை கொள்ள செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் மூன்று படைப்பிரிவுகள் காணப்படுகின்றன.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மூன்று பிரிவுகள் உள்ளன. அத்துடன் வவுனியாவில் ஐந்து படை பிரிவுகளும் கிழக்கில் இரண்டு படைப்பிரிவுகளும் நிலை கொண்டுள்ளன.

ஏனைய 3 படைப்பிரிவுகளே தென்னிலங்கையில் உள்ளன. இந்த நிலையில் தமிழ் பிரதேசங்களில் இராணுவ பிரசன்னம் குறைந்துள்ளதாக கூறப்படுவதில் உண்மை இல்லை என்று த ஹிந்து சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இந்திய அமைதி காக்கும் படையின் தலைவராக இருந்த கேணல் அரிஹரன் யுத்தத்துக்கு பின்னர் மீண்டும் வன்முறைகள் ஏற்படாதிருப்பதற்காக தயார் நிலையில் வைக்கப்படுகின்ற இராணுவ அணிகளை விட இந்த எண்ணிக்கை அதிகமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

குறைந்தபட்சம் ஒரு அணியில் 6 ஆயிரம் தொடக்கம் 7ஆயிரம் இராணுவத்துருப்பினர் இருப்பர் என்று கருதினாலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 85 ஆயிரம் தொடக்கம் 86 ஆயிரம்22 துருப்பினர்கள் வரையில் அங்கு நிலை கொண்டுள்ளமை உறுதியாகிறது.

எனினும் இதில் கடற்படையினர், வான்படையினர் மற்றும் அதிரடிப்படையினரின் எண்ணிக்கைகள் உள்ளடக்கப்படவில்லை. (அ-2)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கவேண்டும்

## பெற்றோர் கோரிக்கை

முல்லை. மாவட்டத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் வான்மை விருத்தியை மேம்படுத்த கல்வி அதிகாரிகள் முன் வரவேண்டும் என பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

முறையாக பயிற்றுவிக்கப்படாத ஆசிரியர்கள் கிராமப்புறங்களில் உள்ள முன்பள்ளிகளில் கற்பிப்பதனால் இன்றைய கற்றல் சூழலுக்கேற்ப கற்பித்தல் முறைகளை கையாள முடியாதுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி மிகவும் அவசியமாகவுள்ளது. குறுங்காலப் பயிற்சி, சேவைக் காலப் பயிற்சி என்பவற்றினூடாக அவர்கள் தமது உளவியலறிவு, கற்பித்தல் முறையறிவுகளை வளர்த்துக் கொள்வதற்கு கல்வி அதிகாரிகள் முன்வரவேண்டும்.

இந்நிலை தொடர்ந்தும் இம்மாவட்டத்தில் காணப்படுவதற்கு முன்பள்ளிகளை மேற்பார்வை செய்வதற்கு அல்லது வழி காட்டல்களை வழங்கும் அதிகாரிகள் நியமிக்கப்படாமையும் நியமிக்கப்பட்டவர்களும் ஒழுங்காக செயற்படாமையும் காரணம் எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

ஆரம்பக் கல்வி தடம்புரண்டால் அது சிறார்களின் கல்வியில் எதிர்கால நகர்வில் பல தாமதங்களை ஏற்படுத்தும் என்பது வெளிப்படை.

எனவே முல்லை மாவட்டத்தை பொறுத்தவரை சகல வளங்களும் அழிக்கப்பட்டு பல பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே எம்மிடம் எஞ்சியுள்ள வளத்தினையும் அறிவையும் மேம்படுத்தி எதிர்கால புத்திஜீவிகளை உருவாக்குவதற்கு நல்ல ஆசான்களை முன்மொழிந்து வழிநடத்திச் செல்வதற்கு இக் கல்விச்சமூகம் முன்வரவேண்டும் என பெற்றோர்கள் வேண்டுகோள்விடுக்கின்றனர். (அ-9-260)

# மு.காவுக்கு புனித குர்ஆனைவிட மஹிந்த சிந்தனையே முக்கியம்

## எதிர்க்கட்சி தலைவர் கிண்டல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புனித குர்ஆனுக்கு அவமரியாதை ஏற்படும் வகையில் செயற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட வட மத்திய மாகாண ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் சிறிகொத்தாவில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தேர்தல் காலத்தில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சனம் செய்திருந்தது.

புனிதகுர்ஆனை விடவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கு மஹிந்த சிந்தனை முக்கியமானதாக மாறியுள்ளது.பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வாக்கு சேகரித்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியுடன் இணைந்து கொண்டு ஆட்சி அமைத்துள்ளது.சப்ரகமுவ மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு இதே துரோகத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் இழைத்துள்ளார்.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல் நடத்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அதில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ)

# தமிழர் பிரச்சினைக்கு தீர்வில்லாததால் மத்தியரசின் நிகழ்வுகள் புறக்கணிப்பு

## கருணாநிதி அதிரடி

(கொழும்பு)

இந்திய மத்திய அரசாங்கத்தின் நிகழ்ச்சிகளை புறக்கணிக்கவிருப்பதாக திராவிட முன்னேற்ற கழகம் தெரிவித்துள்ளது.

கட்சியின் அறிக்கை ஒன்றை மேற்கோள் காட்டி இந்திய ஊடகம் ஒன்று இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

எனினும் இது காங்கிரஸ் கூட்டணியில் இருந்து திராவிட முன்னேற்றக்கழகம் விலகிக் கொண்டுள்ளது என்று அர்த்தப்படாது என்றும் கட்சியின் தலைவர் கருணாநிதி சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை தமிழர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் திராவிட முன்னேற்ற கழகத்துக்கு அதிருப்தி இருக்கிறது. இதனை வெளிப்படுத்தவே இந்த புறக்கணிப்பு தீர்மானம் மேற்கொள்ளப்ப்ட்டுள்ளது.

எனினும் காங்கிரஸ் கூட்டணியில் இருந்து விலகும் எண்ணம் தற்போதைக்கு இல்லை என்றும் கருணாநிதி தெரிவித்துள்ளார். (அ-2)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1947 08 04



உதிர்வு 2012 08 22

## அமரர் சின்னத்தம்பி பாக்கியம்

அன்புடையீர்!

கடந்த 22.08.2012 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் அன்பின் குலவிளக்கு அமரர் சின்னத்தம்பி பாக்கியம் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று (20.09.2012) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (21.09.2012) வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரணி இயற்றாலை,
வரணி.

(சி/1099)

இங்ஙனம்
குடும்பத்தினர்.


# முல்லை.மாவட்ட அபிவிருத்தி பணிகள் ஆமை வேகத்தில்

## தற்காலிக கொட்டகையில் வாழ்கிறோம்– மக்கள் ஆதங்கம்

(றெட்பானா)

நாடெங்கிலும் பல அபிவிருத்தியினூடாக உட்கட்டுமானப்பணிகள் உச்ச வளர்ச்சியை எட்டியுள்ள போதும் முல்லை. மாவட்டத்தில் உட்கட்டுமானப்பணிகள் என்பது ஆமை வேகத்தில் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களும் யுத்தத்தில் அழிந்தன. ஆயினும் கிளிநொச்சி மாவட்டம் பல வழிகளிலும் ஓரளவு முன்னேற்றம் கண்டுவருகின்றது.

இந்நிலையில் இங்கு உட்கட்டுமானப் பணிகள் பாதிக்கப்பட்ட மக்களின் தேவையறிந்து முன்னெடுக்கப்படவில்லை. ஆரம்பகட்ட மீள்குடியேற்றம் இடம்பெற்று 3 வருடங்களைத் தாண்டியும் இன்று பெரும்பாலான குடும்பங்கள் அரசசார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட தற்காலிக கொட்டகையினுள் வாழ்ந்து வருகின்றனர்.


இம்மாவட்டத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களும் 18 தொடக்கம் 35 வயதிற்கு இடைப்பட்ட வேலைதேடி அலையும் இளைஞர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகிறது. இந்நிலை தொடர்ந்து காணப்படுவதால் இங்கு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது.

எனவே, அரசியல் இலாபம் இன்றி பாதிக்கப்பட்ட மக்களாகிய எமக்கு எல்லா வகையான வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதற்கு அரசியல் சமூகம் முன்வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9-260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத இராசி பலன்

## 17.09.2012 - 16.10.2012



## தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

**வழக்குகளில் வெற்றி கிட்டும்!**

**எப்பொழுதும் உயர்ந்த இலட்சியத்துக்காகவே பாடுபடும் தனுசு இராசி நேயர்களே!**

நட்புக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள் நீங்கள். ஏராளமான நண்பர்கள் உங்களுக்குக் கிடைப்பார்கள். அடிக்கடி பயணம் செல்வதில் அலாதி பிரியம் கொண்டவர்கள். வேதாந்தம் பற்றியும் பேசுவீர்கள். விஞ்ஞானம் பற்றியும் பேசுவீர்கள். எல்லா நுணுக்கங்களையும் நீங்கள் அறிந்து வைத்திருப்பதால் எதிரிகள் உங்களைக் கண்டு அஞ்சுவர்.

உங்களுக்கு இந்த புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் குரு ஆறாமிடத்தில் கேதுவுடன் சஞ்சரித்து மாதம் தொடங்குகிறது. தர்மகர்மாதிபதி யோகத்தோடு கிரக நிலை அமைய லாப ஸ்தானத்தில் சனி வீற்றிருப்பதால், நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும் மாதம் இது.

குருச்சந்திர யோகமும், மாதத் தொடக்க நாளில் அமைகிறது. அஷ்டமாதிபதி சந்திரனை குரு பார்க்க, மாதம் தொடங்குவதால் சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டும் விதத்தில் புதிய வாய்ப்புகள் வந்து சேரும். ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். ஒளிமயமான எதிர்காலம் வருவதற்கான வாய்ப்புகள் மற்றும் புதிய பொறுப்புகள் கிடைப்பதற்கான அறிகுறிகளும் தென்படும்.

மாதத்தின் முதல் பத்து நாட்கள் செவ்வாய், சனி சேர்க்கை இருக்கிறது. அதற்கு பின்னால்தான் உங்களுக்கு முழுமையான மனநிம்மதி, அதுவரை வருவது நல்லது. பொதுவாக, சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஏழை, எளிய மக்களுக்கு அன்னதானம், வஸ்திர தானங்களை வழங்குவது, இறை வழிபாட்டில் கவனத்தைச் செலுத்துவது, விலங்கு வளர்ப்பில் ஆர்வம் காட்டி அவைகளுக்கு உணவளிப்பது போன்றவற்றைக் கடைப்பிடித்தால் சனியின் கடுமை அதிகம் ஏற்படாது.

**விருச்சிக செவ்வாயும் துலாம் புதனும்**

செப்ரம்பர் 27 ஆம் திகதி விருச்சிக இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். அதேநாளில் துலாமில் புதனும் சஞ்சரிக்கப்போகிறார். இந்த இரண்டு நிகழ்வுகளும் உங்களுக்கு நன்மையையே வழங்கப்போகிறது. சொத்து விற்பனையால் தனலாபம் கிடைக்கும். சொல்லை செயலாக்கிக் காட்ட அதிக பிரயாசை எடுக்கவேண்டிய சூழ்நிலை நிலவினாலும் முடிவில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளின் தொழில்

செப்ரம்பர் 28 ஆம் திகதி சிம்ம இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். கடன்சுமை குறைய புதிய யுக்திகளை கையாளுவீர்கள். தந்தை வழி சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும். பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். ரிஷப குருவின் வக்ரம் அக்டோபர் 12 ஆம் திகதி நிகழவிருக்கிறது. இதன் மூலம் மாதத்தின் கடைசி வாரத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் ஏராளமாக நடைபெறப்போகின்றன. குறிப்பாக, வாங்கிய சொத்தால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். வங்கிச் சேமிப்பு உயரும். உத்தியோக மாற்றம் எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

இம்மாதம் தென்முகக் கடவுளை இன்முகத்தோடு வழிபட்டால் நன்மைகள் நடைபெறும்.

இம்மாதம் பணவரவு தரும் மாதமாகவே இருக்கிறது. பக்கத்தில் இருப்பவர்களால் ஏற்பட்ட சிக்கல்கள் அகலும். பார்க்கும் குருவை

### ஒளிமயமான எதிர்காலம் அமைவதற்கான வாய்ப்புகள், புதிய பொறுப்புகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும்

எதிரிகளின் பலம் மேலோங்கி இருக்கும். அதன்பிறகு உங்கள் பலம் மேலோங்கி இருக்கும். சனி செவ்வாய் சேர்க்கைக்கு பரிகாரமாக சனீஸ்வர ஸ்தலங்களுக்கு யோகம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வருவது நல்லது. சனிக்கிழமை தோறும் சனிக்கவசம் பாடி, சனிபகவானை வழிபட்டு சம்பந்தமாகவும் வெளிநாட்டுத் தொடர்பு சம்பந்தமாகவும் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதன் குடும்ப ஒற்றுமையை பலப்படுத்தும். மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சி தரும் விதத்தில் தகவலொன்று வந்து சேரும்.

**சிம்ம சுக்கிரனின் சஞ்சாரமும் ரிஷப குருவின் வக்ரமும்!**

பலப்படுத்த, வியாழன் தோறும் விரதமிருந்து வருவது நல்லது. தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும். கணவன்- மனைவிக்குள் இருந்த கருத்துவேறுபாடுகள் அகலும். உடன்பிறப்புகள் விலகிச் செல்லலாம். பிள்ளைகள் வழியில் மேற்பார்வை செலுத்துவது நல்லது.

## ஜோதிடக் கலைமாமணி சீவல்புரி சிங்காரம்

**உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும்!**

**பிறரிடத்தில் உள்ள குறைகளைச் சொல்லாமல், நிறைகளைச் சொல்லி நட்பு வட்டத்தை விரித்துக் கொள்ளும் மகர இராசி நேயர்களே!**

எதிரிகளை வெற்றி கொள்ள என்ன வழி என்பதை அறிந்து வைத்திருப்பவர்கள் நீங்கள். பொது வாழ்வில் ஆர்வம் காட்டுவீர்கள். வாக்கு சாதுர்யமும், வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ளும் ஆற்றலும் உங்களுக்கு உண்டு. நிதானத்துடன் செயற்பட்டு நிலையான புகழைப்பெறுவீர்கள். சதாசர்வ காலமும் ஏதாவது ஒன்றைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பவர்களும் பணிகளை தொடர்வீர்கள்.

அங்காரகனும், சனியும் தொழில் ஸ்தானத்தில் இணைந்திருப்பதால், கூட இருப்பவர்களுடன் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. குறிப்பாக சகோதர விரோதங்களைக் காண நேரிடலாம். கோபத்தை குறைத்துக் கொள்வதன் மூலமும், கொள்கைப் பிடிப்பை தளர்த்திக் கொள்வதன் மூலமும் நிம்மதி காண இயலும்.

இராகு உங்கள் இராசியைப் பார்ப்பதால், ஆரோக்கியத்திற்கென்று ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். சர்ப்ப சாந்தியை முறையாக செய்வதன் மூலம் மிகுந்த நம்பிக்கை உங்களுக்கு கிடைக்கும். இராசிநாதன் உச்சம் பெற்றாலும் மற்ற கிரகங்களின் வலிமையும் கூடுதலாக இருந்தால்தான் நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்ய இயலும். இல்லையேல் நிகழ்கால தேவைகள் சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். நீண்டதூர பயணங்கள் உறுதியாகலாம். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். புதன் துலாம் இராசியில் அதேநாளில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, உத்தியோகம், தொழிலில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரும். கடன்சுமை குறையும். தந்தைவழி சொத்துக்களில் இருந்த பிரச்சினை அகலும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். பூமி யோகம் உண்டு.

**சிம்ம சுக்கிரனும் ரிஷப குருவின் வக்ரமும்!**

சிம்ம இராசியில் சுக்கிரன் செப்ரம்பர் 28 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பிள்ளைகள் வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். கூட்டுத் தொழில் புரிவோர் மாற்றம் காண முன்வருவர். பங்குதாரர்களை மாற்றும்



## மகரம்

இம்மாதம் சனிக்கிழமைகளில் எள் தீபமேற்றி சனிக்கவசம் பாடி சனீஸ்வரரை வழிபட்டு வருவது நல்லது.

சனியின் ஆதிக்கம் பலமாக இருப்பதால் இம்மாதம் மனதில் இருக்கும் ஆசைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். மக்கட் செல்வங்களின் முன்னேற்றம் கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வுகள் வந்து சேரும். குருவின் பார்வையால் உங்கள் இராசி புனிதமடைவதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். கணவன்- மனைவிக்குள் கனிவு கூடும். இதுவரை பாசம் கட்டாத சகோதரர்கள் இப்பொழுது பாசம் காட்டுவர். அம்பிகை வழிபாடு இன்பம் வழங்கும்.

### உத்தியோகம், தொழிலில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேர வாய்ப்புள்ளது

நீங்கள்தான்.

உங்களுக்கு இந்த புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, இராசிநாதன் சனி உச்சம் பெற்று, குருவின் பார்வையோடு மாதம் தொடங்குவதால், எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடைபெறலாம். இல்லத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள். உற்சாகத்தோடும், தெம்போடும் உங்கள் பூர்த்தியாக நிம்மதி தரும் சந்நிதிகளைத்தான் நாடிச் செல்ல வேண்டும். அந்த அடிப்படையில் சனிக்கவசம் பாடி சனீஸ்வரரையும் வழிபடுவது நல்லது.

**விருச்சிக செவ்வாயும் துலாம் புதனும்!**

விருச்சிக இராசியில் செவ்வாய், செப்ரம்பர் 27 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, வருமானம் திருப்தி தரும். இளைய எண்ணமே மேலோங்கும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அதே நேரத்தில் அக்டோபர் 12 ஆம் திகதி ரிஷப குரு வக்ரம் பெறுவதால் ஒரு சில நன்மைகளும் உங்களுக்கு உருவாகும். உறவினர்களிடம் கொடுத்த ஒருதொகை வரவில்லையே என்று நினைத்தவர்களுக்கு அது இப்பொழுது வந்து சேரும். குரு பரிகாரம் செய்தால் குடும்பத்தில் ஏற்படும் மனக்கசப்புகள் உடனுக்குடன் மாறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபைக்கு நட்டம் ஏற்பட்டாலும் சகல மக்களுக்கும் மின்சாரம் கிடைக்கும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசாங்கம் குறுகிய காலகட்டமொன்றில் ஐந்து இலட்சம் குடும்பங்களுக்கு புதிதாக மின்சாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி.ரவி கருணா நாய்க்க வாய்மூல வினாக்களுக்கான விடைகள் வேளையில் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2 1/2 வருடங்களுக்கு முன்னர் நாட்டில் 47 இலட்சம் குடும்பங்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. தற்போது 52 இலட்சம் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

வரட்சி, எரிபொருள் விலையேற்றம், உற்பத்திச் செலவு அதிகரிப்பு என எத்தகைய சவால்களை எதிர்கொள்ள நேரிடினும் அதனால் ஏற்படும் நட்டங்கள் மக்கள் மீது சுமத்தப்பட மாட்டாது . இது விடயத்தில் அரசாங்கம் மிகுந்த அவதானத்துடன் செயற்படுகிறது.

100 இற்கு பதினைந்து வீதமான மின்சாரம் நீர் மின் உற்பத்தி மூலம் பெறப்படுகிறது. ஏனையவை மூலப்பொருளாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றன.

இலங்கை மின்சார சபையானது 2011 ஆம் ஆண்டில் 19.2 பில்லியன் ருபா நட்டத்தை எதிர்கொண்டது. அதேபோன்று இவ்வருடத்தில் 30.9 பில்லியன் ரூபா நட்டமேற்பட்டுள்ளது. இந்நிலையிலும் கடந்த 2 1/2 வருட காலங்களில் மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்களை மண்ணெண்ணெய் பாவனையிலிருந்து விடுவித்து மின் பாவனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டிற்குள் சகலருக்கும் மின்சாரம் வழங்குவதுடன் நட்டத்தையும் சமப்படுத்தும் வகையில் திட்டங்கள் செயற்படுத்தப்படும் என்றார். (அ-2)

# இளைஞர் பாராளுமன்ற 8 ஆவது செயலமர்வு

(தனங்கிளப்பு)

இளைஞப் பாராளுமன்றத்தின் எட்டாவது செயலமர்வு நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைமைக்காரியாலயமான மகரகமவில் நடைபெறவுள்ளது.

இளைஞர் திறன் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் வேண்டுகோளுக்கிணங்க கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ் அமர்வில் தேசிய கல்விக் கொள்கை சம்பந்தமான விவாதம் இளைஞர் பாராளுமன்றின் கல்விச் செயற்குழுவினால் மேற்கொள்ளப்படவுள்ளது. (அ-3-37)

# ஆளும்கட்சி அரசியல்வாதி நூறு கோடி வரிமோசடியில்

## ஐ.தே.க. எம்.பிக்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆளும் கட்சியின் அரசியல்வாதி ஒருவர் நூறு கோடி ரூபா வரி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்ச டி சில்வா மற்றும் கபீர் ஹசீம் ஆகியோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மதுபான இறக்குமதிகளின் போது அரசாங்கத்துக்கு சேர வேண்டிய நூறு கோடி ரூபா வரியை குறித்த அரசியல் வாதி செலுத்த தவறியுள்ளார்.

ஆளும் கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதியொருவர் நூறுகோடி ரூபா வரி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இந்த வரி மோசடி தொடர்பான விசாரணைகளை நடத்த வேண்டாம் என அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

எனினும் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளர் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பத்திரிகையில் தகவல்கள் வெளியாகும் வரையில் அரசாங்கம் ஏன் இது குறித்து விசாரணை நடத்தவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியினர் கேள்வி எழுப்பியுள்ளனர். (அ-2)

# தொடர் சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது.

இம்மஹோற்சவ காலங்களில் தினமும் மாலை 4.45 மணிக்கு தொடர் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன.

அந்த வகையில் விஷ்ணு புராணமும் பகவத் கீதை விளக்கவுரையும் எனும் தலைப்பில் துன்னாலை கோயிற்கடவை பிள்ளையார் ஆலய பிரதம குருவும் அம்பன் அ.மி.த.க.பாடசாலை ஆசிரியருமான சிவஸ்ரீ நாகரட்ணகலா சிவாச்சாரியார் சொற்பொழிவாற்றி வருகிறார். (அ-9-35)

## பாரதவின் கொலை வழக்கு

# வீடியோ காட்சிகள் குறித்து விரிவான கலந்துரையாடல்

(கொழும்பு)

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உள்ளிட்ட அவரது ஆதரவாளர்களுக்கு இடையில் துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்ற இடத்தில் பதிவு செய்யப்பட்ட வீடியோ காட்சிகள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் விரிவாக கலந்துரையாடியதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வரின் கொலை தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல் விஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 16 சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கமாறு உத்தரவு பிறப்பித்த மேலதிக நீதவான் வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ-2)

# மீண்டும் உண்ணாவிரதத்தில் குதிக்கிறார் செந்தூரன்

(கொழும்பு)

உண்ணாவிரதம் இருந்து தற்கொலை முயற்சி வழக்கில் கைது செய்யப்பட்ட செந்தூரன் நேற்று பிணையில் வெளிவந்ததை தொடர்ந்து மீண்டும் முகாமில் அடைக்கப்பட்டார்.


முறையான ஆவணங்கள் இல்லாமல் கடல் வழியாக தமிழகத்திற்கு ஊடுருவிய இலங்கை அகதிகள் செங்கல்பட்டு முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு மோதல் ஏற்பட்டதை தொடர்ந்து செந்தூரன் உட்பட எட்டு பேர் பூந்தமல்லியில் உள்ள இலங்கை அகதிகள் சிறப்பு முகாமிற்கு மாற்றப்பட்டனர்.

தன் மீதுள்ள வழக்கை விரைந்து விசாரிக்க வேண்டும். தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி செந்தூரன் கடந்த மாதம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

உடல்நிலை மோசமானதை தொடர்ந்து செந்தூரன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வந்த செந்தூரனை கடந்த மாதம் 31 ஆம் திகதி பொலிஸார் தற்கொலை முயற்சி வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

பிணையில் நேற்று முன்தினம் வெளிவந்த செந்தூரனை பொலிஸார் பூந்தமல்லி சிறப்பு முகாமில் அடைத்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் முதல் செந்தூரன் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். (அ-2)





இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிக்கேல் சிசன் நேற்று முன்தினம் யாழ்.வர்த்தகத் தொழிற்றுறை வேளாண் மகளிர் ஒன்றிய பணிப்பாளர் லயன் எஸ்.ஜே. செல்வராஜாவையும் ஜே.பி. ஒன்றிய அங்கத்தவ தொழில் முயற்சியாளர்களையும் யாழ். அமெரிக்கன் கோணரில் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது ஒன்றிய தொழில் முயற்சிகள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் பெண்களின் தொழில் மேம்படுத்தல் மற்றும் தொழில் பயிற்சிகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

47

தப்புலன்

தப்புலனின் காலத்தில் உருகுணை மன்னனான மகிந்தவுடன் முரண்பட்ட அவனது இரு புதல்வர்கள் நாட்டைவிட்டு அகன்று அனுராதபுரம் வந்து மன்னனிடம் அடைக்கலம் புகுந்தான். மன்னன் தப்புலன், பெரும் படையோடு அந்த இருவரையும் உருகுணைக்கு அனுப்பி வைத்தான். அதனைக் கேள்வியுற்ற உருகுணைத் தலைவன் மகிந்தன் பெரும் சேனையோடு எதிர்கொள்ள பயந்து போன இரு புதல்வர்களும் ஒரு சேனைத் தலைவனிடம் பொறுப்பினைக் கொடுத்துவிட்டு அனுராதபுரத்திற்கு மீண்டனர். உருகுணை மன்னன் வேறொரு மன்னனுடன் போரிட்ட வேளை இரு மன்னரும் மரணமடைந்தனர். அதன்பின் அனுராதபுர மன்னன் தப்புலன் உருகுணை இளவரசர்களில் மூத்தவனாக கித்தக்கபோதி என்பவனுக்குத்தன் மகள் தேவியை மணம் முடித்துக்கொடுத்து அடுத்த இளவரசன் தப்புலனை (அதேபெயர்) சேனைத் தலைவனாக்கி திரண்ட செல்வங்களுடன் உருகுணைக்கு அனுப்பி வைத்தான். கித்தக்கபோதி உருகுணையின் அரசனாகினான். அவனுக்கும் தேவிக்கும் ஆண்பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் பிறந்தனர்.



மகாசேனன் காலத்து ரன்திஸ்ஸ வெவ

அனுராதபுர மன்னனான தப்புலன் பல சமயப் பணிகளை ஆற்றினான். விகாரைகளைத் திருத்துவித்தான். சமயக்கட்டடங்களை அமைப்பித்தான். அவனுடைய சேனாதிபதியான வைஜ்ஜிரா என்பவனும் கச்சாவல எனும் விகாரையைக் கட்டுவித்தான். பதினாறு வருட ஆட்சி முடிவில் தப்புலன் மரணமடைந்தான்.

அக்கபோதி

அதன்பின் இராச்சியத்தின் அரசுரிமை தனக்கேயுரியதென தப்புலனின் மகனான அக்கபோதி அறிவித்தான். ஆனால், தப்புலனால் முன்னரேயே அவனது சகோதரன் மகனான மகிந்தன் என்பவன் ஒரு பிராந்தியத்தின் ஆதிபாதா (ஆளுநர்)வாக இருந்தான். அவனும் அவனது சகோதரர்களும் இராச்சியம் தமக்குரியதெனத் தம்சேனையுடன் கிளர்ந்தெழுந்தனர். அவர்களை தன் படையுடன் எதிர்கொண்ட அக்கபோதி அவர்தம் படையைச் சிதறடித்து மகிந்தனையும் சகோதரர்களையும் சிறைப்பிடித்து அவர்கள் அனைவரினதும் சிரசுகளைக் கொய்வித்தான். பின்னர் பல சமயப் பணிகள் ஆற்றினான். வறுமைப்பட்டவர்களையெல்லாம் பறையறிவித்து அழைத்து அவர்களுக்குத் தங்கம் வழங்கி வாழ்க்கை நடாத்த வழி செய்தான். தனது மூன்றாண்டு ஆட்சியின் பின் மரணமடைந்தான்.

சேனன் I

அக்கபோதியினுடைய இளைய சகோதரனான சேனன் (கி.பி 833-கி.பி.853) அடுத்து அரியணை ஏறினான். முன்னைய மன்னர்கள் செய்த நற்பணிகளைத் தொடர்ந்து ஆற்றினான். இந்தியாவிற்குத் தப்பியோடியிருந்த முன்னைய அரசனின் மருமகனாகிய மகிந்தனால் [illegible] சிக்கு இடைஞ்சல் [illegible] அவனை ஆட்களை அனுப்பிக் கொலை செய்வித்தான். சேனனுக்கு இளைய சகோதரர்களாக மகிந்தன், காசியப்பன், உதயன் என மூவர் இருந்தனர். இவர்களில் மகிந்தனை யுவராஜாவாக்கினான். ஏனையோரைப் பிராந்தியங்களுக்கு ஆதிபாதாக்களாக்கினான்.

அரசனின் பட்டத்து மகஷியாக சங்கா (தேவி) என்பவள் விளங்கினாள். ஒரு தடவை மன்னன் கடல் துறைக்கு (மகாதீர்த்தம்) ஓய்வின் நிமித்தம் சென்றிருந்தபோது அவரது சகோதரனும் ஒரு பிராந்திய ஆளுநனுமாகிய உதயன் அரண்மனைக்குள் புகுந்த அரசனின் பாதுகாப்பிலிருந்த அத்தை மகளான நாலா என்பவளைக் கடத்திக்கொண்டு புலத்திநகர் சென்றான். மன்னன் உடன் திரும்பி வந்து கோபமுற்றானாயினும், பதற்றப்படாது யுவராஜா மகிந்தனை அனுப்பி உதயனையும் நாலாவை மீண்டும்





அனுராதபுர கால புத்தர் சிலை

# உத்தரதேசமும் உக்கிரசிங்கனும்

உத்தரதேசமும்

உக்கிரசிங்கனும்

உக்கிரசிங்களுக்கு முன்னர்...


யாழ்ப்பாண அரச எனப்பிற் காலத்தில் அழைக்கப்பட்ட உத்தர தேசத்தின் பண்டைய நாளில் நாகநாடு, சிங்கை நாடு (சிங்கை நகர்), மணவை (மணற்றி), ஈழம், தமிழ்ப்பட்டினம் எனப் பலவாறாக அழைக்கப்பட்டிருக்கின்றது. கி.மு. 2 ஆம் நூற்றாண்டிலிருந்தே அப்பகுதியில் மக்கள் குடியேற்றம் இருந்தது என்பதைத் தொல்லியற் சான்றுகள் திட்டவட்டமாக நிறுவுகின்றன. உத்தரப் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் விஜயனின் வருகைக்கு முன்னரே திராவிட நாகரிகம் இங்கு நிலைபெற்றிருந்ததைக்காட்டி நிற்கின்றன. வலிமையான அனுராதபுரத்தின் ஆட்சியின் [illegible]. பிரதேசத்தில் பல [illegible] சிறப்புற் றிருந்துள்ளன.

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

வடவிலங்கையில் நாகர்களினதும் இவர்களோடு கலந்து திராவிடர்களினதும் குடியிருப்புகள் வளர்வது தென்னிலங்கைச்சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தலையிடி கொடுத்திருக்க வேண்டும். இந்தியாவுடனான சகல தொடர்புகளும் வடவிலங்கைத் துறைமுகங்களான மாதோட்டம், ஜம்புக்கோளம் என்பன ஊடாகவே நடந்து வந்தன. எனவே, வடவிந்திய ஆரியருக்கும் தென்னிலங்கைச் சிங்களவருக்குமிடையே திராவிடக் குடியேற்றங்களமைவது களையவேண்டியதாகப்பட்டிருக்கும். உத்தரதேசத்தைத் தக்கிணதேசத்தின் ஆதிக்கத்தினுள் வைத்திருக்க விருப்பு எழுந்தது. அதனால் கி.மு. 1 ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்கு முன்னர் தென்னிலங்கையிலிருந்து ஈழ மண்டலத்தின் மீது பெரும்படையெடுப்பொன்று நிகழ்ந்திருக்க வேண்டும். அந்தக்காலகட்டத்தில் கந்தரோடை எனப்படும் கதிரமலையே ஈழ மண்டல ஆட்சியாளனின் தலைநகரமாக இருந்திருக்க வேண்டும். (தொடரும்)



வெசஜகிரிய விகாரை




நாக பொக்கன- பாம்புக்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## வெப்பத்தோடு ஒளி வீசுகிற விளக்கு (Incandescent Lamp)

வெப்ப முதல்கள் எல்லாம் ஓர் அகன்ற திருசியத்தை (**broad spectrum**) கொண்டுள்ளன. அதாவது அவை ஓர் பரந்த வீச்சில் (**wide range**) சக்திகளை கொண்ட போட்டோன்களை (**Photons**) காலுகின்றன. வெப்பத்தோடு ஒளிவீசுகின்ற முதல்களின் நிறமானது அவற்றின் வெப்பநிலையுடன் தொடர்புபட்டது. சூடான முதல்கள் (**Hotter sources**) அவற்றின் திருசியத்தில் கூடிய ளவு நீலத்தை (**blue**) கொண்டிருக்கையில் குளிர்மையான முதல்கள் (**Cooler Sources**) அதிகமாக சிவப்பாக (**Red**) உள்ளன.




வெப்பத்தோடு ஒளிவீசுகின்ற விளக்குகளில் ஏறக்குறைய 75% ஆன கதிர்வீசல் செங்கீழ் கதிராக (**infrared rays**) உள்ளது. விஞ்ஞானிகள், இயற்கையான வெப்பத்தோடு ஒளி வீசும் முதல்களுடன் (**real incandescent light source**) கரும்பொருள் (**black body**) என அழைக்கப்படும் கொள்கை சார்ந்த வெப்பத்தோடு ஒளி வீசும் முதல்களின் (**Theatrical incandescent light source**) இயல்புகளை ஒப்பிட்டு ஆராய்ந்னர்.




தன் மீது விழும் எல்லாக் கதிர்ப்புக்களையும் முற்றாக உறிஞ்சும் பொருள் கரும் பொருள் எனப்படும். இது பூரண கதிர்த்தியாகவும் தொழிற்படும். கரும்பொருட் கதிர்ப்பின் செறிவு அதன் வெப்பநிலையில் மட்டும் தங்கியுள்ளது. கரும்பொருளிலிருந்து அலகு நேரத்தில் அலகு பரப்பிலிருந்து கதிர்க்கப்படும் சக்தி கதிர்ப்புச் செறிவு எனப்படும். அதாவது அலகு பரப்பிற்கு செங்குத்தாக ஒரு செக்கனில் கடக்கும் கதிர்வீச்சு சக்தி கதிர்ப்புச் செறிவாகும். கரும் பொருளானது எல்லா அலை நீளங்களிலும் வெப்பக் கதிர்ப்பு அலையைக் காலும். வெவ்வேறு வெப்ப நிலைகளில் கரும்பொருளால் காலப்படும் அலகு நீளத்திற்கான கதிர்ப்புச் செறிவு அலை நீளத்துடன் மாறுவதை வரைபு காட்டுகிறது. வெப்ப நிலை அதிகரிக்க வளையீ அலை நீள அச்சுடன் அமைக்கும் பரப்பு அதிகரிக்கின்றது. அதாவது வெப்பநிலை அதிகரிக்க கதிர்ப்புச் செறிவு அதிகரிக்கின்றது என்பதை மேலுள்ள வரைபு காட்டுகின்றது. அத்துடன் வெப்ப நிலை அதிகரிக்க காலப்படும் உயர் செறிவிற்கு ஒப்பான அலை நீளம் $\lambda_m$ குறைவதையும் மேற்படி வரைபு காட்டுகின்றது. அதாவது உயர் செறிவிற்கு ஒப்பான அலைநீளம் $\lambda_m$ இடப்புறமாக அதிகரிக்கின்றது.

ஒரு கரும்பொருளானது இலச்சியமான வெப்பத்தோடு ஒளி வீசும் முதலாக (**ideal incandescent light source**) உள்ளது. இதிலிருந்து வெளிவரும் திருசியம் (**Emission spectrum**) அதன் வெப்பநிலையில் மட்டும் தங்கியுள்ளது. ஒளியை வெளிவீசும் சடப்பொருளின் (**material**) தன்மையில்




இத் திருசியம் தங்காது. கரும் பொருளானது எல்லா அலைநீளங்களிலும் வெப்பக் கதிர்ப்பு அலையைக் காலும். வெவ்வேறு வெப்ப நிலைகளில் கரும் பொருளால் காலப்படும் அலகு நீளத்திற்கான கதிர்ப்பின் செறிவு அலை நீளத்துடன் மாறுவதை மேலுள்ள வரைபு காட்டுகிறது.

| வெப்ப நிலை | பொருளின் நிறம் |
|---|---|
| 800K | மங்கல் சிவப்பு |
| 1200K | கடும் சிவப்பு |
| 1500K | மஞ்சள் |
| 2000K | வெண்மை |

வெப்ப ஒளி வீச்சு விளக்குகள் பல்வேறு அளவுகளில் செய்யப்படுகின்றது. அத்துடன் வெவ்வேறு அழுத்த வேறுபாடுகளில் தொழிற்படக்கூடியதாகவும் ஆக்கப்படுகிறது. (1.5 **Volt** தொடக்கம் 300 **Volt** வரை) இவற்றை அழுத்தத்தை சீராக்கும் உபகரணம் (**regulating equipment**) எதுவுமின்றி பாவிக்கலாம். இவற்றின் உற்பத்திச் செலவு (**manufacturing cost**) மிகவும் குறைவானது. அத்துடன் இவை ஆடலோட்ட மின்னோட்டத்திலும் (**alternating current**) நேரோட்ட மின்னோட்டத்திலும் (**direct current**) நன்றாக தொழிற்படக்கூடியவை. இதன் காரணமாக இவை வீட்டு மின்சுற்று விளக்குகளாகவும் (**household lamps**) எளதில் எடுத்துச் செல்லக்கூடிய விளக்குகளாகவும் (**portable light**) மேசை'விளக்குகளாகவும் (**table lamp**) காரின் தலைமை விளக்குகளாகவும் (**car head lamps**) பளிச்சீட்டு விளக்குகளாகவும் (**flash lights**) அலங்கார விளக்குகளாகவும் (**decorative lamps**) விளம்பர விளக்குகளாகவும் (**advertising light**) பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. வெப்ப ஒளி வீச்சு விளக்கில் வெப்பம் பிறப்பிக்கப்படுவதன் காரணமாக அது செயற்கை முறையில் முட்டைகளிலிருந்து குஞ்சு பொரிக்கப் பயன்படும் சாதனத்தில் (**incubator**) பயன்படுகின்றது.

பல தேவைகளுக்கு பயன்படும் வெப்ப ஒளி வீச்சு விளக்குகளைக் கண்டுபிடித்த எடிசன் 1931 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி தனது 84 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். எடிசனின் உடல் அடக்கஞ் செய்யப்பட்ட போது அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த **Herbert Hoover** அத்தியாவசிய தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுபவை தவிர்ந்த ஏனைய மின் விளக்குகளை ஒரு நிமிடம் அணைத்து எடிசனின் ஆன்மா முத்தியடையப் பிரார்த்திக்குமாறு உத்தரவிட்டிருந்தார். ஒக்டோபர் 21 ஆம் திகதி மாலை 9.59 க்கு எடிசனின் புகழுடல் அடக்கஞ்செய்யப்பட்டபோது நியூயோர்க்கிலுள்ள **Statue of Liberty** சிலையின் கையிலிருந்த தீப்பந்தம் மாலை 9.59 க்கு தனது ஒளியை இழந்தது. வீதிகளிலிருந்த **Traffic Signals** விளக்குகள் தவிர ஏனைய விளக்குகள் ஒரு நிமிடம் கண்ணை மூடின. சிக்காக் கோவில் வீதி வழியே சென்று கொண்டிருந்த மின்சார வண்டிகள் ஒரு நிமிடம் நின்றன. டென்வரிலும் மாலை நேரத்தில் மின் விளக்குகள் ஒரு நிமிடம் கண்ணை மூடி அஞ்சலி செய் தன. அப்போது கலிபோர்னியாவிலும் சூரியனும் தன் ஒளியைக் குறைத்து கடலில் மூழ்கியது.




ஏனைய ஒளி முதல்களுடன் ஒப்பிடுகையில் எடிசன் குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்ட வெப்ப ஒளி வீச்சு மின்விளக்கில் அதிகளவு சக்தி வெப்பமாக வீண் விரயமாகின்றது. இதன் காரணமாக விஞ்ஞானிகள் அதிக திறன் வாய்ந்த ஒளி ம்தலை உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இவ்வகையில் சேதன ஒளி காலும் இருவாயி (**organic light- emitting diode (OLED)**) ஆனது மின்சக்தியை ஒளிச் சக்தியாக மாற்றுவதில் நூறுவீதம் திறன் (**100 percent efficient**) வாய்ந்தது. இங்கு வெப்ப சக்தி விரயம் எதுவுமில்லை.

வெப்ப ஒளி வீச்சு மின்விளக்கில் அதிகளவு சக்தி வெப்பமாக வீண் விரயமாவதால் இதன் பாவனையை படிப்படியாக இல்லா தொழிக்கும் சட்டம் 2007 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க சட்ட மன்றத்தில் (**the United States Congress**) நிறைவேற்றப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு தொடக்கத்தில் வீட்டுத் தேவைக்கும் ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும் இதன் விற்பனை நிறுத்தப்பட்டு 2014 ஆம் ஆண்டில் இதன் பாவனையை முற்றாக இல்லதொழிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மாற்றீட்டாக அதிக திறன் வாய்ந்த (**more energy-efficient**) மின்காந்த அலையதிர்வில் வண்ண ஒளி காலுகின்ற சுண்ணச் சிமிழ் விளக்குகள் (**compact fluorescent bulbs**) அல்லது ஒளிகாலும் இருவாயிவிளக்குகள் (**LED lights**) பொருத்தப்படவுள்ளன. (தொடரும்)

ஏ.குகன்
*BSc.(Cey), Dip in Ed.(Merit), Msc.in Phy oF Material, MATE (International)*
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 72

**உலக அதிசயங்களுள் ஒன்றான தாஜ்மஹாலின் பளிங்கு வடிவம் வனப்பிழந்து போகின்றமைக்குக் காரணமான வாயு எது?**

விடைகளை 01.10.2012 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**து.பிரதீபன்**
ஆசிரியர், பிரிவு -A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 71 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

சோதிலிங்கம் அருட்செல்வம்
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

### புதிர் 71 இற்கான கேள்வியும் விடையும்:

**'பிக் அப்பிள்' என அழைக்கப்படும் அமெரிக்க நகரம் எது?**
**விடை:-நியூயோர்க்**

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
### புதிர் இல. 72

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொலைபேசி இல:..............................
கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ.வரும் மஹிந்தவை எதிர்க்க அமெ.தமிழர்கள் தயாராகின்றனர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கெடுத்து உரை நிகழ்த்தவுள்ளார். அவர் அமெரிக்காவிற்கு செல்லவுள்ள நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வட அமெரிக்கத் தமிழர்கள் தயாராகி வருகின்றனர்.

பொங்கு தமிழ் எனச் சங்கே முழங்கு என்ற கொட்டொலியுடன் பொங்கு தமிழ் எனும் கவனயீர்ப்பு எழுச்சி நிகழ்வினை மேற்கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 26 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றவுள்ள நிலையில் அதே நாளில் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்துக்கு முன்னால் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இப்பெருநிகழ்வு இடம்பெறவுள்ளது.

தமிழீழத் தாயக மக்கள் எழுச்சியின் குறியீடாக அமைந்த பொங்கு தமிழ் பெரு நிகழ்வினை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முன்னெடுக்கின்றது.

உலகத் தமிழர்கள் பலரும் பங்கெடுத்துக் கொள்கின்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் இரத்தம் தோய்ந்த தமிழினப் படுகொலையின் முகத்தை உலகிற்கு அம்பலப்படுத்தும் நோக்கில் இக்கவனயீர்ப்பு நிகழ்வு இடம்பெறுகின்றது. (அ-2)

# கிழக்கு மாகாணத்தின் எதிர்க்கட்சி தலைவர் யார்?

## விரைவில் முடிபு என்கிறார் சுரேஷ் எம்.பி.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரட்ணம் மற்றும் திருமலை. மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்ற முன்னாள் மாகாண கல்வி பணிப்பாளர் தண்டாயுதபாணி ஆகிய இருவரில் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மாகாண சபையில் யாரை எதிர்க்கட்சி தலைவராக நியமிப்பது என்பது தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை என அக்கட்சியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற கிழக்கு மாகாண சபை தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 11 ஆசனங்களை கைப்பற்றி இரண்டாவது இடத்தை பெற்றது.

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து பலமான எதிர்க்கட்சியை கிழக்கு மாகாண சபையில் ஏற்படுத்தவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

எனினும் யாரை எதிர்க்கட்சி தலைவராக நியமிப்பது என்பது தொடர்பில் தீர்மானிக்கவில்லை. இது தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விரைவில் கூடி தீர்மானமொன்றை எடுக்கவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# கிறிஸ்பூதம் வழக்கு; நீதிமன்றால் ஒத்திவைப்பு

(கொழும்பு)

கலகம் விளைவிக்க தூண்டியமைக்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் மீது திருக்கோவில் பொலிஸாரினால் கடந்த வருடம் வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கு நேற்று முன்தினம் பொத்துவில் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதில் கட்சியின் எதுவித ஆதரவும் இன்றி தனி மனிதனாக வழக்கினை எதிர்கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் எவ்வேளையிலும் நீதிமன்றால் அழைக்கப்படின் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்று நீதிபதியின் வேண்டுகோளுடன் தீர்ப்பு இன்றி நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மர்ம மனிதர்களின் நடமாட்டத்தால் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் கிறிஸ் மனிதன் ஒருவனை மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

இந்நிலையில் சிறிது நேரத்தில் அவர் விடுதலை செய்யப்பட்டதன் விளைவாக மக்களும் பொலிஸாரும் முரண்பட்டுக் கொண்டிருக்கையில் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் மக்களுடன் இணைந்து பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததனாலே இவ்வழக்கு இவர் மீது தொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந-1)

# விடைத்தாள் திருத்தும் பணி தொடர்பில் சந்திப்பு

(கொழும்பு)

நடந்து முடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணியை ஆரம்பிப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுடன் எதிர்வரும் 24 ஆம் திகதி விசேட கூட்டமொன்றை நடத்தவிருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் புஷ்பகுமார தெரிவித்தார்.

விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட சுமார் 400 வரையிலான ஆசிரியர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர். இவர்களுடனேயே இப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விரைவில் விடைத்தாள் திருத்தும் பணிக்கு வருகை தருவரென நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)




★ 1792-பிரான்சில் முடியாட்சி அகற்றப்பட்டு குடியரசு நிறுவப்பட்டது.

★ 1860-இரண்டாம் ஒப்பியம் போர்: ஆங்கிலேய, பிரெஞ்சுப் படைகள் சீனப் படைகளைத் தோற்கடித்தன.

★ 1896-பிரித்தானியப் படைகள் சூடானின் டொங்கோலா நகரைக் கைப்பற்றின.

★ 1921-ஜேர்மனியில் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற பெரும் வெடி விபத்தில் சிக்கி ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

★ 1934-ஜப்பானில் மேற்கு ஹொன்சூ என்ற இடத்தில் இடம்பெற்ற சூறாவளி காரணமாக 3 ஆயிரத்து 36 பேர் உயிரிழந்தனர்.

★ 1938-நியூயோர்க்கின் லோங் தீவில் சூறாவளி காரணமாக 500 முதல் 700 வரையானோர் உயிரிழந்தனர்.

★ 1939-ருமேனியாவின் பிரதமர் ஆர்மண்ட் கலினெஸ்கு தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1942-மேற்கு உக்ரைனில் 2 ஆயிரத்து 500 யூதர்கள் நாசிகளினால் கொல்லப்பட்டனர்.

★ 1964-மோல்டா, ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.

★ 1972-பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பேர்டினண்ட் மார்க்கொஸ் முழு நாட்டிலும் இராணுவ ஆட்சியைப் பிறப்பித்தார்.

★ 1981-பெலீஸ் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.

★ 1990-மட்டக்களப்பு ஆரையம்பதியில் புதுக்குடியிருப்பு கிராமத்தில் 17 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1991-ஆர்மேனியா சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.

★ 1995-விநாயகரின் சிலைகள் பால் குடிக்கும் அதிசயம் உலகின் பல இடங்களில் இடம்பெற்றது.

★ 1999-தாய்வானில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 2 ஆயிரத்து 400 பேர் உயிரிழந்தனர்.

★ 2001-நாசாவின் டீப் ஸ்பேஸ் 1 விண்கலம் பொரெல்லி வால் வெள்ளிக்கு அண்மையாக 2 ஆயிரத்து 200 கி.மீ. தூரத்திற்குள் சென்றது.

★ 2003-கலிலியோ விண்கலத் திட்டம் இடைநிறுத்தப்பட்டு அது ஜூப்பிட்டர் கோளின் வளிமண்டலத்தினுள் அனுப்பப்பட்டு அதனுடன் மோதவிடப்பட்டது.

★ 2004-பூர்ஜ் டுபாய் கட்டட அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1866-எச்.ஜி.வெல்ஸ், ஆங்கில எழுத்தாளர் (இ.1946)

★ 1909-குவாமே நிக்ரூமா, கானா பிரதமர் (இ.1972)

★ 1954-சின்சோ அபே, ஜப்பானிய அரசியல்வாதி

★ 1957-கெவின் ரட், அவுஸ்திரேலியாவின் 26 ஆவது பிரதமர்

★ 1963-கேட்லி அம்ப்ரோஸ், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் பந்தாளர்

### இறப்புகள்

★ 1971-பெர்னார்டோ ஹூசே, நோபல் பரிசு பெற்றவர் (பி.1887)

★ 1989-ராஜினி திராணகம, இலங்கையின் மனித உரிமை மற்றும் பெண் உரிமை செயற்பாட்டாளர் (பி.1954)

★ 2007-விஜயன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

★ 2008-டி.பி. விஜயதுங்கா, இலங்கையின் 4 ஆவது ஜனாதிபதி (பி.1922)

### சிறப்பு நாள்

★ உலக அமைதி தினம்

**ராஜினி திராணகம**



ராஜினி திராணகம அல்லது ராஜினி ராஜசிங்கம் திராணகம இலங்கையில் இருந்த மனித உரிமை செயற்பாட்டாளரும் பெண் உரிமை செயற்பாட்டாளரும் ஆவார்.

ராஜினி யாழ்ப்பாணத்தின் தமிழ் கிறிஸ்தவக் குடும்பத்தில் 1954 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி பிறந்தார். இவருக்கு நிர்மலா, சுமதி, வாசுகி என்ற மூன்று சகோதரிகள் உள்ளனர். ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணத்தில் முடித்துக் கொண்ட ராஜினி 1973 இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவப் புலத்தில் இணைந்தார். அக்காலப்பகுதியில் மாணவர் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

இதன் போது அரசியல் ஈடுபாட்டைக் கொண்ட மாணவர் தலைவரான தயாபால திராணகமவை சந்தித்தார்.

தயாபால திராணகம பின்னாளில் களனிப் பல்கலைக்கழக விரிவுரையாளராக இணைந்து கொண்டார். 1977 இல் திராணகமவை ராஜினி மணந்து கொண்டார். அவர்களுக்கு நர்மதா (1978), ஷரிகா (1980) என இரண்டுக் பெண் குழந்தைகள் பிறந்தனர்.

1980- இல் ராஜினி போர் மூண்ட நிலையில் இருந்த யாழ்ப்பாணம் திரும்பி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவப் புலத்தில் உடற்கூறியல் விரிவுரையாளராக இணைந்தார். 1983 இல் பொதுநலவாய புலமைப் பரிசில் பெற்று உடற்கூறியல்துறையில் பட்டப்பின் படிப்பை மேற்கொள்ள இங்கிலாந்து சென்றார்.

1986 இல் பட்டப்பின் படிப்பை முடித்து தனது இரண்டு குழந்தைகளுடன் இலங்கை திரும்பிய ராஜினி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உடற்கூறியல் பிரிவுத் தலைவராக பொறுப்பேற்றார். இந்நிலையில் கணித விரிவுரையாளராக பணியாற்றிய ராஜன் ஹூல் சிறிதரன், தயா சோமசுந்தரம் என்பவர்களுடன் இணைந்து 1990 இல் வெளியிடப்பட்ட முறிந்த பனை (The Broken Palmyra) என்ற ஆங்கில நூலை எழுதினார். இவர்கள் நால்வரும் இணைந்து 1988 இல் மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தை தொடங்கினர்.

### கொலை

1989 ஆம் ஆண்டு செப்டெம்பர் 21 ஆம் திகதி பணியில் இருந்து வீடு திரும்பும் வழியில் அடையாளம் தெரியாத ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி ஆட்டங்கண்டுள்ள நிலையில் இந்திய மத்தியஅரசு

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு அளித்துவரும் ஆதரவை வாபஸ் பெறுவதாக திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி அறிவித்தார்.

மத்திய மந்திரி சபையில் இடம் பெற்றுள்ள 6 திரிணாமுல் காங்கிரஸ் மந்திரிகள் (வெள்ளிக்கிழமை) இன்று தங்கள் ராஜினாமா கடிதங் களைக் கொடுப்பார்கள் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

மத்திய அரசுக்கு கொடுத்து வரும் ஆதரவு வாபஸ் முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டுமானால் தங்களது 3 நிபந்தனைகளை நிறை வேற்ற வேண்டும் என்று மம்தா பானர்ஜி கூறியிருந்தார்.

சில்லறை வர்த்தகத்தில் 51 சதவீத அன்னிய நேரடி முதலீட்டை திரும்பப் பெறவேண்டும். மானிய விலையில் வழங் கப்படும் சிலிண்டர்கள் எண்ணிக் கையை 12 ஆக உயர்த்த வேண்டும். டீசல் விலையை ரூ.3 அல்லது ரூ. 4 ஆக குறைக்க வேண்டும். ஆகியவை மம்தாவின் நிபந்தனைகளாகும்.

டீசல் விலை உயர்வையும், சில் லறை வர்த்தகத்தில் 51 சதவீத அந்நிய நேரடி முதலீட்டையும் திரும்பப் பெற இயலாது என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறி இருப்பதாகத் தகவல் வெளியானதை அடுத்து, ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இருந்து திரிணாமுல் காங்கிரஸ் முழு மையாக விலகும் என்று தெரிய வந்துள்ளது. திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு 19 எம்.பி.க்கள் உள்ளனர். அவர்கள் ஆதரவு இல்லாததால் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் பலம் 273-ல் இருந்து 254 ஆக சரிந்துள்ளது.

மத்தியில் காங்கிரஸ் அரசு ஆட்சி யில் நீடிக்க வேண்டுமானால் 272 எம்.பி.க்களின் ஆதரவு வேண்டும். தற்போது மத்திய அரசை சமாஜ்வாதி, பகுஜன சமாஜ் கட்சி, ராஷ்டீரிய ஜனதா தளம், மதசார்பற்ற ஜனதா தளம், ராஷ்டீரிய லோக் தளம் ஆகிய 5 கட்சிகள் ஆதரிக்கின்றன. இதில் முலாயம்சிங் சமாஜ்வாதி கட்சிக்கு 22 எம்.பி.க்கள், பகுஜன சமாஜ் கட்சிக்கு 21 எம்.பி.க்கள், ராஷ்டிரீய லோக்தளம் கட்சிக்கு 5 எம்.பி.க்கள், ராஷ்டீரிய ஜனதா தளம் கட்சிக்கு 4 எம்.பி.க்கள், மதசார்பற்ற ஜனதா தளம் கட்சிக்கு 3 எம்.பி.க்கள் என மொத்த 55 எம்.பி.க் கள் உள்ளனர்.

இந்த 55 எம்.பி.க் களின் ஆதரவை பெறுவதன் மூலம் மத்திய அரசுக்கு 309 எம்.பி.க்கள் ஆதரவு இருக்கும். எனவே, அரசுக்கு இப்போ தைக்கு எந்த ஆபத் தும் இல்லை என்று கூறப்படுகிறது.

இருப்பினும் தற் போதைய சூழ்நிலை யில் முலாயம் ஆத ரவை மட்டும் காங்கிரஸ் பெற்றாலே போதும், அரசுக்கான பலம் 276 ஆக உயர்ந்து விடும். அதுபோல மாயாவதி கட்சி ஆதரவை மட்டும் பெற்றால், மத்திய அரசுக்கான பலம் 275 ஆக இருக்கும்.இதில் மாஜாவதியின் கட்சி ஆதரவு கிடைக்கலாம் என நம்பப் படுகிறது.

எனவே, தற்போது மத்திய அரசு தன் ஆயுளை நீட்டித்துக்கொள்ள முலாயம் சிங், மாயாவதி இருவரையும் சார்ந்தே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மம்தா ஏற்படுத்தி உள்ள நெருக்கடி காரணமாக மத்திய அரசுக்கு தற்போது வெளியில் சொல்ல முடியாத அளவிக்கு திணறல் ஏற்பட்டுள்ளது. இதனால், காங்கிரஸ், தனது கட்சியின் முக்கிய உறுப்பினர்குழுவுடன் சோனியா தலை மையில் கூட்டமொன்றை பிரதமர் இல் லத்தில் கூடி ஆராய்ந்துள்ளனது. முடிவு கள் பற்றிபின்பே தெரியவரும்.

தற்போது மாநில கட்சிகளின் பிடி யில் சிக்கி இருக்க வேண்டிய நிலையில் காங்கிரஸ் உள்ளதுஎன்பதே உண்மை. எனவே, ஆதரவளிக்கும் மாநில கட்சிகளுடன் காங்கிரஸ் மூத்த தலை வர்கள் தொடர்பு கொண்டு பேசி வருகி றார்கள்.

இதற்கிடையே கூட்டணியில் உள்ள கட்சிகளையும் வெளியில் இருந்து ஆதரவு கொடுக்கும் கட்சிகளையும் காங் கிரஸ் மதிப்பது இல்லை என்ற பொது வான குற்றச்சாட்டு உள்ளது. முக்கிய பிரச்சினைகளில் தங்களை காங்கிரஸ் கலந்து ஆலோசிப்பதில்லை என்ற மனக்குறையும் தோழமை கட்சிகளிடம் காணப்படுகிறது.

மேற்படி அரசுடனான ஆதரவை விலக்கிக் கொள்வது தொடர்பாக திரிணாமுல் காங்கிரஸ்கட்சியின் தலை வர் மம்தா பானர்ஜி கூறியதாவது, "இப் பிரச்சினை தொடர்பாக நாங்கள் மூன்று நாட்களாக ஒரு நல்ல முடிவுவரும் என்று எதிர்பார்தோம். ஐக்கிய முற் போக்கு கூட்டணியில் இருக்கவே விரும்பினோம்; ஆனால், அவர்கள் எங்களை அங்கு இருக்க அனுமதிக்க வில்லை. ஆகையால் நாங்கள் அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொள்கி றோம். அக்கூட்டணியில் அரசியல்பதவி வகித்த எங்கள் உறுப்பினர்கள் இன்று வெள்ளியன்று பிரதமரை சந்தித்து பதவி விலகும் ராஜினாமா கடிதத்தை வழங்கு வார்கள். இருப்பினும் ஐக்கிய முற் போக்கு கூட்டணியுடன் ஒரு நல்லி ணக்க வாய்ப்பிற்காக மூன்று நாட்கள் அவகாசத்தை அக்கட்சிக்கு கொடுத் திருக்கிறோம்" என்பதாகும்.

மம்தாவின் விலகல் தொடர்பாக ஏனைய கட்சிகள் தெரிவித்திருப் பதாவது,

சமாஜ்வாதிக்கட்சி:-திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் இந்த முடிவை தொடர்ந்து, சமாஜ்வாதிக்கட்சி இங்கு எந்த ஆதிக்கமும் செலுத்தாது. இவ் விடயத்தில் சுதந்திரமான ஒரு முடி வையே நாங்கள் எடுப்போம்; அரசு கவிழக்கூடிய வாய்ப்புள்ள இந்த நிலையில் மிக முக்கியமான முடிவு எடுக்கப்பட வேண்டும்; இது குறித்து முடிவெடுக்க கட்சியின் [illegible] முலாயம்சிங் யாதவ் [illegible] சென்றுள்ளார் எனத் தெரிவித்தது.

ராஷ்ட்ரிய லோக்தளம் கட்சி தலை வர் லல்லு பிரசாத் யாதவ் தெரிவித் ததாவது: "மம்தாவின் இந்த முடிவு ஒன்றும் புதிதானதல்ல. அவர் தனது முடிவை மீண்டும் மாற்றவும் கூடியவர்.

இருப்பினும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் விலகலால் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் காங்கிரஸ் கட்சியானது பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண் டிய கட்டாய நிலையில் உள்ளது. 545 உறுப்பினர்கள் உள்ள லோக் சபாவில்



தனது பெரும் பான் மையை நிரூபிக்க காங் கிரஸ்கட்சி 273 உறுப்பினர்க ளின் ஆதரவை காட்டவேண்டும். ஆனால், திரி ணாமுல் காங் கிரஸ்கட்சி வில கலால் 19 உறுப் பினர்கள் குறைந் துள்ளனர்.

ஆயினும் காங்கிரஸ் கட் சிக்கு வெளி யில் இருந்து ஆதரவு அளி த்து வரும் 22 உறுப்பினர்க ளைக் கொண்டுள்ள சமாஜ்வாதிக் கட்சியினிடமோ அல்லது 21 உறுப்பி னர்களைக் கொண்டுள்ள பகுஜன் சமாஜ் கட்சியினிடமோ தனது ஆதரவை கேட்க வேண்டிவரும்" என்று கூறியிருந்தார்.

இதற்கிடையே மத்திய அரசுக்கெதி ராக எதிர்க்கட்சிகள் இன்று முழு அடைப்பு போராட்டத்தை நடத்துகின் றன. அதற்கு தி.மு.க. ஆதரவு அளிப் தாக அறிவித்து இருப் பது அரசியல் வட்டா ரத்தில் பரபரப்பை ஏற் படுத்தியுள்ளது.



மேலும் இதுவரை அரசின் செயல்க ளுக்கு ஆதரவு அளித்துவந்த கருணா நிதி, "தி.மு.க.வின் தொழிற்சங்கமான தொ.மு.ச. இந்த போராட்டத்தில் கலந்து கொள்ளும்" என்று அறிவித்திருக்கிறார். இதுவும் அரசியல் பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்தியிருக் கிறது.

இன்று அகில இந்திய அளவில் நடக்கும் பொது வேலை நிறுத்தத்தில் தி.மு.க. மட்டுமல்ல. தமிழகத்தின் பல்வேறு கட்சிகளும் ஆதரவு வழங்கு கின்றன. வேலைநிறுத்தப் போராட்டத் தில் லாரி உரிமையாளர்கள், ஆட்டோ தொழிலாளர்கள் மற்றும் வேன் , வாடகைக்கார் உரிமையாளர்களும் பங்கேற்கின்றனர்.

24 மணி நேர அடையாள வேலை [illegible] பிறகாவது மத்திய அரசு விலை ஏற்றத்தை கைவிடவேண்டும். மத்தியஅரசுக்கு 30 நாட்கள் அவகாசம் தருகிறோம் அதற்குள் டீசல்விலை யைக் குறைக்கவில்லை என்றால் அக்டோபர் 19 ஆம் திகதி முதல் கால வரையற்ற வேலை நிறுத்த போராட் டத்தில் ஈடுபடப்போவதாக, போக்கு வரத்து சம்பந்தமான மக்களமைப்புகள் தெரிவித்திருக்கின்றன. இத்தகைய நெருக்கடிகளுக்குள் இருக்கும் மத்திய அரசுக்கு இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயமும் ஒரு பெரு நெருக்கடி கொடுக்கும் விடயமாகவே அமைந்துள்ளது.

இந்தியாவுக்கு மூன்று நாள் உத்தி யோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு தமிழ் நாட்டில் எதிர்ப் புத் தெரிவித்து போரா ட்டங்கள் அதிகளவில் வலுத்துள்ளன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இந்திய விஜயத்துக்கு எதிர்ப் புத் தெரிவித்து தீக்கு ளித்துக்கொண்ட விஜ யராஜ் மரணித்துவிட் டது புதிய சவாலாக அமைந்திருந்தது.

விஜயராஜின் தந்தை தங்கவேலும் மற்றும் உறவினர்களும், இலங்கை ஜனாதிபதியின் இந்திய வருகையை தடைசெய்து இந்திய மத்தியஅரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் இந்தக் கோரிக்கை களை நிறைவேற்றும்வரை எனது மகனின் பிரேத பரிசோதனையை நடத்த அனுமதிக்க விரும்பவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் என்று அவர்கள் கூறியிருந்தனர். இதையடுத்து தங்கவேல் மற்றும் குடும்பத்தினர் உறவினர்கள் திடீரென விஜயராஜ் உடல் வைக்கப்பட்டிருந்த வைத்தியசாலைக்கு முன்பு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். அவ ருக்கு ஆதரவாக விடுதலைச் சிறுத் தைகள், ம.தி.மு.க., திராவிட விடுதலைக் கழகம், நாம் தமிழர் கட்சி, தமிழத் தேசியப் பொதுவுடமைக்கட்சி, தோழர் கள்வட்டம் மற்றும் ஏராளமான தமிழ் இன உணர்வாளர்களும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு எழுச்சிப்படுத்தினர்.

இருப்பினும் பின்னர் விஜயராஜின் உறவினருடன் துணை பொலிஸ்கமி ஷனர் ஏ.ஜி.பாபு பேச்சுக்களை நடத்தி, அவர்களை போராட்டத்தை கைவிடு மாறு செய்துள்ளார். விஜயராஜின் உடலைப் பெற்றுக்கொண்ட உறவினர், அவரது உடலை பொதுமக்கள் அஞ்ச லிக்காக வைத்துள்ளனர். பெருமள வான மக்களும் அரசியல் தலைவர் களும் அஞ்சலி செலுத்தியதோடு அது ஒரு பெரும் எழுச்சி நிகழ்வாக மீண்டும் பரிணாமம் பெற்றிருந்தது.

இந்நிலையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி, இலங்கை ஜனாதிபதி மத்தியப் பிரதேச விழாவில் கலந்து கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித் துள்ளார்.

"ராஜபக்சவை இந்தியா வரவேற் பதை தமிழன் தாங்கமாட்டான். இந்திய அரசு ராஜபக்ச வருகையை தடுத்து நிறுத்த வேண்டும்" என்று அவர் கூறியுள்ளார். மேலும் "சேலம் விஜயராஜின் உயிர்த் தியாகத்துக்குப் பிறகாவது ராஜபக்ச இந்தியா வருவதை மத்திய அரசு அக் கறையோடு சிந்திக்க வேண்டும்" என்றும் அவர் கேட்டுக் கொண்டுள் ளார். இவ்வாறாக பல நெருக்கடிகளால் ஆட்டங்கண்டுள்ளது இந்திய அராங்கம்.

தொகுப்பு-சாருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுத்தங்கள் தொடர்பில் ம.உ.ஆ.வில் முறையிடுவேன்

## இ.ஆ.சங்கத்தின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமக்கு எதிராக பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்கள் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப் படவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸார் தம்மீது தேவையற்ற அழுத் தங்களை பிரயோகித்து வருகின்றனர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வெளியாகியமை தொடர்பில் புலனாய்வு பிரிவினர் வாக்கு மூலங்களை பதிவு செய்து கொண்டுள்ளனர்.

கல்வி அமைச்சின் உத்தரவிற்கு அமைய புலனாய்வு பிரிவினர் ஐந்தாம் ஆண்டு புல மைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் முன் கூட் டியே வெளியானமை தொடர்பில் விசாரணை ஆரம்பித்திருந்தனர்.

இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவ தற்கு முன்னதாகவே பரீட்சை வினாத்தாள் கள் வெளியாகவில்லை என பொலிஸார் அறிவித்திருந்ததாக மஹிந்த ஜயசிங்க சுட் டிக்காட்டியுள்ளார்.

பரீட்சை வினாத்தாள் எவ்வாறு வெளியா னது என்பதனை விசாரிக்காமல் அது தொடர் பிலான தகவல்களை மக்களுக்கு அம்பலப் படுத்திய தம்மை நெருக்கடிக்கு உள்ளாக்கி, விசாரணை நடத்துவதில் அர்த்தமில்லை என் றார். (அ-2)

# 25 பாடசாலைகள் புனரமைப்பு

(மல்லாவி)

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினதும் வடக்கு மாகாண கல்வி திணைக் களத்தினதும் நிதி அனுசரணையுடன் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 25 பாடசா லைகளுக்கு பாடசாலைகளின் சிறு புனரமைப்பிற்கும் மற்றும் குடிநீர், சுகாதார வசதிகளை ஏற்படுத்துவதற்காகவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது இதற்கான வேலைகளும் துரிதகதியில் நடைபெறுவதாக துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் துணுக்காய் கல்வி கோட்டத்தில் 9 பாடசாலைகளும் மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்தில் 4 பாடசாலைகளும் ஒட்டுசுட்டான் கல்வி கோட்டத்தில் 7 பாடசாலைகளும் தலா ஒரு இலட்சம் ரூபா நிதியில் பாடசாலைகளில் காணப்படும் சிறுபுனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் அனுசரணையுடன் துணுக்காய் கல்வி வல யத்தில் உள்ள 5 பாடசாலைகளில் தலா 6 இலட்சம் ரூபா நிதியில் குடிநீர், சுகாதார வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-3-15)

# ஐந்து கிராமங்களுக்கு கிராம சேவகர்கள் இல்லை

## சேவையை பெறுவதில் மக்கள் சிரமம்

(முல்லைத்தீவு)

பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவி லுள்ள 15 கிராமங்களில் 5 கிராமத்திற்கு கிராம சேவையாளர் இன்மையால் தமது உடனடித் தேவைகளை பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக் கின்றனர்.

இதில் வன்னிவிளாங்குளம், சிவபுரம், நெட்டாங்கண்டல், பொன்நகர், விநாயகபுரம் ஆகிய பகுதிகளுக்கே கிராம சேவையாளர்கள் இல்லை என தெரிவிக்கின்றனர். கடந்த 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு இன்றுவரை கிராம சேவையாளர் நியமிக்கவில்லை. ஏனைய கிராம சேவையா ளர்களே மேற்குறித்த கிராமங்களுக்கும் பதில் கடமை புரிகின்றனர். அவர்களது பதில் கட மையும் ஒரு நாள் மட்டுமே உள்ளது.

ஏனைய நாட்களில் ஏற்படும் தேவைகளை யாரிடம் சென்று நிறைவேற்றுவது என மக் கள் கேள்வி எழுப்புகின்றனர். எனவே, இவ் விடயத்தைக் கருத்திற்கொண்டு உரிய தரப் பினர் உடன் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# தேசிய உற்பத்தியை பாதுகாப்பதே அரசாங்கத்தின் பிரதான இலக்கு

## அமைச்சர் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய உற்பத்தியை பாதுகாப்பதையே பிரதான இலக்காக கொண்டிருக்கும் எமது அரசாங்கம் ஒருபுறம் நுகர்வோரின் தேவை களையும் மறுபுறம் உற்பத்தியாளர்களின் நலன்களையும் கருத்தில் கொண்டே சகல நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதாக சர்வதேச நிதி ஒத்துழைப்பு தொடர்பிலான சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.


விசேட வியாபார பண்ட அறவீட்டு சட்டத் தின் கீழான நான்கு ஒழுங்கு விதிகளையும் சுங்க கட்டளைச்சட்டத்தின் கீழான ஒரு தீர்மா னத்தையும் மோட்டார் வாகன ஒழுங்கு விதி தொடர்பான இரு ஒழுங்கு விதிகள் ஆகியவ ற்றை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அமை ச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அமை ச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

உள்ளூர் உற்பத்தியாளர்களையும் உற் பத்திகளையும் நுகர்வோரையும் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது அவசியம். அதற்கு ஏற்ப வரி முறைகளை தயாரிக்க வேண்டி யுள்ளது. ஏனென்றால் உள்ளூர் உற்பத்தி காலத்திற்கு காலம் வேறுபடுகின்றது.

சில பொருட்களின் உற்பத்தி ஒரு போக த்திற்கு கூடுகின்றது. மற்றொரு போகத்திற்கு குறைகின்றது. இதற்கு உருளைக்கிழங்கு உற்பத்தி நல்ல உதாரணம். இந்த நிலைமை காரணமாக நுகர்வோருக்கு சில பொருட்களை தொடராக சீராக வழங்க முடியாதுள்ளது.

அதனால் அவ்வாறான சூழ்நிலையில் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக் குமதி செய்ய வேண்டியுள்ளது. அதனை உள்ளூர் உற்பத்தியும் உள்ளூர் உற்பத்தியா ளர்களும் பாதிக்கப்படாத வகையில் மேற் கொள்கின்றோம்.

இந்த நிலையில் காலநிலை காரணமாக எமது திட்டங்களையும் மாற்ற வேண்டியு ள்ளது. என்றாலும் எமது அடிப்படை இலக்கே உள்ளூர் உற்பத்தியாளர்களையும் உற்பத்திக ளையும் பாதுகாப்பதே. அதேநேரம் நுகர்வோ ருக்கும் நியாயம் பெற்றுக் கொடுப்பதுமாகும் என்றார். (அ-2)



ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் இந்திய வருகையைக் கண்டித்து நேற்றைய தினம் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.

# தேர்தல் முறைமை குறித்த புதிய சட்டமூலம் நிறைவேற்றப்படும்

## அமைச்சர் தினேஷ் நம்பிக்கை

உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய தேர்தல் முறைமை குறித்த இரு சட்ட மூல ங்கள் ஒக்டோபர் 10 ஆம் திகதி நாடாளு மன்றத்தில் அங்கீகரிக்கப்படும் என அரசா ங்க தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்த ல்கள் (திருத்த) சட்டமூலம் மற்றும் உள்ளூ ராட்சி அதிகார சபைகள் சட்டம் ஆகிய இரு சட் டமூலங்களையும் நிறைவேற்றுவதற்கு அரசி யல் கட்சிகளின் தலைவர்கள் இணக்கம் கண்டுள்ளனர்.

உத்தேச சட்டத்தின்படி உள்ளூராட்சி அதி கார சபைகளுக்கான 70 சதவீத பிரதிநிதிகள் தொகுதிவாரி முறைமை மூலம் தெரிவு செய் யப்படுவர். 30 சதவீதமான பிரதிநிதிகள் விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையின் மூலம் தெரிவு செய்யப்படுவர். (அ-2)

# கிழக்கு தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு அவர்கள் மனங்களை வெல்வேன்

## கிழக்கின் முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஐ.தே.க. அடங்கலான கிழக்கு மாகாண சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் கிழக்கு பிரதேசத்தை முன் னேற்றுவதே எனது இலக்காகும். கிழக்கில் சகல இன மக்களும் சமமாகவும் ஒற்றுமை யுடனும் அமைதியாக வாழும் சூழலை ஏற்படுத் தவும் சகல இன மக்களுக்கும் சமமாக சேவை யாற்றவும் முழுமையாக தன்னை அர்ப்ப ணிக்கப் போவதாக புதிய கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தெரிவி த்துள்ளார்.

இரண்டாவது கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரான நஜீப் அப்துல் மஜீத் தனது எதிர்கால திட்டங்கள் குறித்து கருத்துரைக் கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண அமைச்சரவை மூவி னத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என நான் அரசாங்கத் திடம் கோரியுள்ளேன். அரசாங்கமும் அந்த நிலைப்பாட்டிலே உள்ளது.

சுற்றுலா, விவசாயம், கால்நடை அபி விருத்தி, மீன்பிடித்துறை அடங்கலான கிழக்கு டன் தொடர்புடைய பிரதான துறைகளை மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் அபிவி ருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளேன்.

இதனூடாக கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இளைஞர், யுவதிக ளுக்கான வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் முழு முயற்சியும் எடுப்பேன்.

பல வருடங்களாக காணப்படும் காணிப் பிரச்சினைக்கும் எனது பதவிக் காலத்தில் தீர்வு காண சகல நடவடிக்கைகளையும் எடுக் கவுள்ளேன். தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அதற்கு உரிய தீர்வு வழங்குவதினூடாகவே அவர்க ளின் மனங்களை வெல்ல முடியும். அதே போன்றுதான் சிங்கள சமூகத்துடன் தொடர் புள்ள பிரச்சினைகளை அடையாளங்கண்டு தீர்க்க வேண்டும். ஜனாதிபதியின் ஆதரவுடன் கிழக்கு பிரதேசத்தை முன்னேற்றுவதற்கு ஆவன செய்யப்படும்.

குறுகிய காலத்தினுள் கூடுதல் அபிவிருத்தி செய்வதே எனது இலக்காகும். என்மீது நம் பிக்கை வைத்தே ஜனாதிபதி என்னை கிழக்கு மாகாண முதலமைச்சராக நியமித்துள்ளார் என்றார். (அ-2)

# இலங்கையருக்கு 10 ஆண்டுகள் சிறை

இலங்கையர் ஒருவருக்கு இந்திய நீதி மன்றம் பத்தாண்டு கால சிறைத்தண் டனை விதித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றத்திற்காக குறித்த நபருக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபருக்கு சிறைத்தண்டனை க்கு மேலதிகமாக ஒரு இலட்சம் ரூபா இந்தியப்பணம் அபராதமாக விதிக்கப்பட் டுள்ளது. கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி குறித்த இலங்கையரை இந் திய பொலிஸார் கைது செய்திருந்தனர்.

ஹாஷீஷ் ரக போதைப்பொருள் ஆறு கிலோகிராம் வைத்திருந்ததாக குறித்த நபருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டி ருந்தது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எல்லோரும் இந்நாட்டு மன்னர்!

வெகு காலத்திற்கு முன்னர் நமது நாட்டை *விசுவாமித்திரர்* என்பவர் ஆட்சி புரிந்து வந்தார். மிகுந்த வலிமையும் செல்வச் சிறப்பும் கொண்டு திகழ்ந்தார்.

குடிமக்கள் அவரிடம் மிகுந்த பயபக்தியுடன் நடந்து வந்தனர். தன்னை எவரும் எதிர்க்க முடியாது என்ற எண்ணம் அவருக்கு உண்டு. அவருக்கு பத்து ஆண் மக்கள் இருந்தனர்.

ஒருநாள் விசுவாமித்திர மன்னர் தனது பிள்ளைகள், படை, பரிவாரங்களுடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றார்.

காட்டில் தங்கி வேட்டையாடக்கூடாரங்கள் அமைக்கப்பட்டன. அவர்கள் அங்கு தங்கியிருந்த இடத்தின் அருகில் வசிட்டமுனிவரின் ஆசிரமம் இருந்தது. விசுவாமித்திர மன்னர் காட்டிற்கு வந்து கூடாரத்தில் தங்கியிருப்பதை அறிந்தார்.

வசிட்டமுனிவர், தனது குடிசைக்கு வந்து விருந்துண்ணுமாறு விசுவாமித்திரருக்கு அழைப்பு விடுத்தார். அதனை ஏற்றுக்கொண்ட அரசர் விசுவாமித்திரர் தனது மக்களுடனும் சில வீரர்களுடனும் முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்றார்.

முனிவர் அவர்களை மிகவும் அன்புடன் வரவேற்று உபசரித்தார். தங்கம் மற்றும் வெள்ளித் தட்டுகளில் விதவிதமான உணவுப்பண்டங்கள் விருந்தில் பரிமாறப்பட்டன.

மிகவும் ஆச்சரியப்பட்ட அரசர், முனிவர் பெருமானே தாங்கள் வசிப்பதோ புல் வேய்ந்த எளிமையான குடிசையில்.

ஆனால், தங்கம், வெள்ளியினால் ஆன தட்டு களில் அறுசுவை உணவுகள் எப்படி வந்தது? என்று கேட்டார்.

வசிட்டர் தனது ஆசிரமத்தின் அருகில் கட்டப்பட்டிருந்த ஒரு பசுவைக் காட்டினார். என்னிடம் *நந்தினி* என்ற பசு இருக்கிறது. அது வேண்டிய அளவு பால் தருவதுடன் எது கேட்டாலும் இந்தப்பசு அதனை அளிக்க வல்லது என்று கூறினார் முனிவர்.

இதனைக்கேட்டு வியந்த



அரசர் அந்தப் பசுவின்மேல் மிகுந்த விருப்பம் கொண்டார். முனிவர் பெருமானே இந்தப் பசுவை எனக்குத் தந்து விடுங்கள்.

அதற்கு பதிலாக நான் தங்களுக்கு ஐந்நூறு பசுக்களையும் அதேயளவு தங்க நாணயங்களையும் தருகிறேன் என்றார். தனது சொல்லை எவரும் மீறமுடியாது என்ற அகந்தை மன்னன் மனதில் இருந்தது.

ஆனால் வசிட்டரோ அரசர் கேட்ட நந்தினி என்ற அந்தப் பசுவைத்தர மறுத்துவிட்டார். இதனால் அரசர் மிகவும் ஆத்திரமடைந்தார். தனது வீரர்களிடம் பசுவை அவிழ்த்துக் கொண்டு போகும்படி ஆணையிட்டார்.

வீரர்கள் பசுவின் கயிற்றை அவிழ்த்து ஓட்டிச் செல்ல முயன்றனர். பசு அங்கிருந்து நகர மறுத்தது. அது வசிட்டரை சுற்றிச்சுற்றி வந்து கண்ணீர் வடித்தது.

வசிட்டர் பொறுமையிழந்தார். அவர் மிகவும் ஆவேசமுடன் மன்னன் என்றால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று எண்ணாதே! நீ விரும்பியபடியெல்லாம் குடிமக்களின் எந்தப்பொருளையும் கவர்ந்து கொள்ளலாம் என்று எண்ணுவது தவறு என்று கூச்சல் போட்டார்.

அருகில் உள்ள வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த குடியானவர்களின் செவிகளில் முனிவரின் கூச்சல் கேட்டது. அவர்கள் ஆசிரமத்தை நோக்கி விரைந்தோடி வந்தனர்.

தடிகளுடன் அவர்கள் வருவதைக் கண்ட மன்னர் அவர்களை அடித்துவிரட்டும்படி கட்டளையிட்டார். வீரர்களுக்கும் குடியானவர்களுக்கும் இடையில் கடும் சண்டை



ஏற்பட்டது. அரசரின் பிள்ளைகளும் சண்டையில் ஈடுபட்டனர். அவர்கள் அனைவரிடமும் வாள், வேல், ஈட்டி, அம்பு போன்ற ஆயுதங்கள் இருந்தன. குடியானவர்களிடமோ கம்புகள் மட்டுமே இருந்தன.

சண்டை சில நாட்கள் நீடித்தது. மன்னர் தனது தலைநகரிலிருந்து மேலும் வீரர்களை வரவழைத்தார்.

குடியானவர்களும் எல்லாக் கிராமங்களிலும் தண்டோரா போட்டு மக்களைத் திரட்டினர்.

கடும் சண்டை நடந்தது. அரசர் தரப்பில் அவரது மகன்களும் மற்றும் பல வீரர்களும் மாண்டு போனார்கள். பல வீரர்கள் அங்கிருந்து ஓடிப்போயினர்.

தோல்வியடைந்த மன்னர் மிகுந்த வேதனைக்கு உள்ளானார். தனது தவறான ஆசையினாலும் ஆணவத்தினாலும் வன்முறை எண்ணத்தாலும் ஏற்பட்ட பாதகங்களைப் புரிந்து கொண்டார்.

நாசவழிகளில் செல்வது நல்லதல்ல என்பதை அந்தத் தோல்வி அவரை உணர வைத்தது. அவர் மனம் விரக்தியடைந்தது. எல்லாப் பற்றுக்களையும் துறந்து தன்னந்தனியாக இமயமலையை நோக்கிப் புறப்பட்டார்.

நாட்டில் மன்னர் இல்லை. ஆட்சி நிர்வாகத்தை கவனிப்பது யார் என்ற பிரச்சினை நாட்டுமக்களிடையே ஏற்பட்டது.

குடியானவர்கள் வசிட்டரையே மன்னராகும்படி வேண்டினர். ஆனால், அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. முனிவர் அவர்களிடம் நாட்டின் குடிமக்களாகிய நீங்கள்தான் ஆட்சியை நிர்வகிக்க வேண்டும்.

கிராமங்களில் நிர்வாக சபைகளை ஏற்படுத்துங்கள். தேர்தல் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களைக் கொண்டு ஆட்சியை நடத்துங்கள். நீங்கள்தான் இந்நாட்டின் மன்னர்கள். மக்களாட்சியைச் செயற்படுத்துங்கள் என்று கூறினார்.

அன்றுமுதல் எந்தவொரு மனிதனுக்கும் தானே அரசனாகி தன் விருப்பப்படி சர்வாதிகாரமாக ஆளும்படி உரிமை இல்லாமல் போய் விட்டது.

***எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்றவாறு மக்களே மன்னர்களாயினர்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாயில் படைமுகாம்களை அமைக்க அனுமதி வழங்கவில்லை

## திட்டவட்டமாக மறுக்கிறார் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புதிதாக 4 படை முகாம்களை அமைக்க இராணுவம் கோரிய காணிகள் மக்கள் விருப்பத்திற்கு விரோதமாக வழங்கப்படமாட்டாது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த காணிகளை வழங்க அனுமதித்ததாக கூறுவது தவறானது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் புதிதாக 4 படைமுகாம்களை அமைக்க சுமார் 550 பரப்புக் காணியை இராணுவத்தினர் கோரியுள்ளனர் என அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பிரதேச செயலரினால் முன் வைக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இராணுவத்தினர் கோரியுள்ள காணிகள் அரச காணிகள் எனவும் பொது மக்களிடமிருந்து ஆட்சேபம் வரவில்லை என்றால் அந்தக் காணிகளை வழங்க முடியும் எனவும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த காணிகள் அரச காணிகளாக இருக்கின்ற போதிலும் அந்த இடங்களில் அரச திணைக்களங்கள். நிறுவனங்கள் வருவதை மக்கள் விரும்பலாம். ஆனால், இராணுவ முகாம் வருவதை விரும்பமாட்டார்கள். எதற்கும் அப்பகுதி மக்களுடன் சென்று கலந்துரையாடி அவர்களின் விருப்பத்தை அறிந்த பின்பே எந்தவொரு முடிவும் எடுக்கப்படலாம் என பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்தார்.

இருப்பினும் குறித்த காணிகளை இராணுவத்திற்கு வழங்க பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தலைவர் சம்மதம் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் குறித்த காணிகள் இராணுவத்தினருக்கு கொடுக்கப்பட்டதா? இல்லையா? என்ற கேள்வி அமைச்சிடம் கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர் இராணுவத்தினர் கோரிய காணிகளை பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் முடிவினை மட்டும் வைத்துக் கொண்டு கொடுப்பதா இல்லையா என தீர்மானிக்க முடியாது.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிற்கே இறுதி தீர்மானம் எடுக்கும் அதிகாரம் உள்ளது. அத்தோடு குறித்த காணிகளை கொடுப்பதற்கு ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# சகபாடி ஆதரவுக்குழு கலந்துரையாடல்

(பூந்தோட்டம்)

வவுனியா வடக்கு மற்றும் தெற்கு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு, மன்னார் கல்வி வலயங்களை சேர்ந்த முதன்மை உளவள துணையாளர்களுக்கான சகபாடி ஆதரவுக்குழு கலந்துரையாடலும் மாதாந்த ஒன்று கூடலும் நேற்று வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் வடமாகாண வள சமூகவள நிலையத்தின் உதவி முகாமையாளர் ச.ஆனந்தநடராஜன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பிரபல உளநல மருத்துவர் வைத்திய கலாநிதி எஸ் . சிவதாஸ் கலந்து கொண்டு உள நல மேம்பாடு தொடர்பான கருத்துரைகளை வழங்கியிருந்தார்.

இக் கலந்துரையாடலில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஆசிரியர்கள் எதிர்நோக்கி வரும் உள்நல ரீதியிலான பிரச்சினைகள் மற்றும் மாணவர்கள் எதிர்நோக்கி வரும் கற்றலுக்கான இடையூறு கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருந்தது. (அ- 9- 266)

# ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதி யான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேவிபாகவதம் எனும் தலைப் பிலான தொடர் சொற்பொழிவினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் சு.குமாரவேல் ஆற்றவுள்ளார். (அ-9-35)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## MEDIA RESOURCE AND TRAINING CENTRE

(Joint venture of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden)

**Post of Director (on Contract)**

Applications are invited from suitable condidates for the post of Director (Full-Time) on contact basis in the Media Resource and Training Centre, University of Jaffna upto **19th October 2012.**

**Qualifications:**

i. A Degree of a recognized University and a postgraduate degree with publications. Priority will be given to applicants with publications **related to Media Studies**.

ii. **Minimum of ten (10)** Years experience in **academic administration** and/ or in **an Executive position** in a Government Department, State Corporation. Higher Educational Institution/ Institute or in a recognized N.G.O.

♦ Preference will be given to those who have experience in Leadership from both media and academic world and have vital and upto date knowledge in Media Literacy and engagement with media and civil society.

♦♦ Senior Academics of Universities who are willing to undertake this position during their sabbatical leave could also apply for this position.

Applications are expected from suitable candidates **below 55 years.**
**Salary: Rs.50,000/- (All inclusive fixed per month)**

♦♦♦ A person may be placed at a higher salary point in consideration of his special qualifications and or / experience.

**Note:** The Candidates are required to submit **a statement of vision for the development of the MRTC**

**Selection by interview**

**General Conditions:**

This is a **full-time assignment,** initially for a period of **one year** from the date of commencement of the assignment and renewable if the services rendered and work performances during the tenure of assignment are satisfactory.

The appointee will become a contributor to the Employees Provident Fund (EPF). Media Resources and Training Centre will contribute the EPF and Employees Trust Fund (ETF).

Application forms and other details may be obtained from the office of the **Senior Assistant Registrar/ Academic Establishments,** University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of **Rs.100/-** per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope 23x10 cm in size.

Appplications for the above posts shallbe sent to the **seniorAssistant Registrar/ Academic Establishments, University of Jaffna**

Applicants from the University system/ Government Departments/ Coparations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Incomplete, illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

**Registrar**
**2012.09.20**

(C-1098)


# கட்டாய மத்தியஸ்தத்தின் மூலம் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை

## ப.ஆ.ச. சம்மேளன தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

எமது போராட்டத்தை முறியடிக்க 10 நிமிடம் போதுமானது என அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க கூறியுள்ளார். எமது போராட்டத்தை முறியடிக்க இவர்களால் முடியாது. கட்டாய மத்தியஸ்தத்தில் நேரத்தையும் பணத்தையும் விரயமாக்குவதில் அர்த்தமில்லை. நாம் பலவீனமானவர்கள் அல்லர். நாம் பணியப்போவதில்லை என பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளன தலைவரான கலாநிதி நிர்மல் தேவசிறி தெரிவித்துள்ளார்.

தேசப்பற்றுள்ள பல்கலைக்கழக ஆசிரியர் அரங்கமானது பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் மீது சேறு பூச தொடங்கியுள்ளதாகவும் இந்நிலையானது மேலும் தீவிரமாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வழிவகுத்துள்ளதாகவும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தேசப்பற்றுள்ள பல்கலைக்கழக ஆசிரியர் அரங்கமானது அரசாங்க ஆதரவு இயக்கம் எனவும் அச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டரை மாதங்களாக பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் மேற்கொள்ளும் தொழிற்சங்க நடவடிக்கை மூலம் பல்கலைக்கழக முறைமையை முடக்கி விட்டதாக தேசப்பற்றுள்ள பல்கலைக்கழக ஆசிரியர் அரங்கம் கூறுவதாக பல்கலைக்கழக ஆசிரியர்களின் சங்கங் களின் சம்மேளன அங்கத்தவரான பிரபாத் ஜயசூரிய கூறியுள்ளார்.

அவர்கள் தம்மை தேசப்பற்றுள்ளவர்கள் எனக் கூறுகின்றனர். நாம் அவர்களை அரசாங்கத்தின் பின் செல்வோர் என கூறுகின்றோம் என அவர் தெரிவித்தார். (அ-2)

# வாக்குப்பலத்திற்கு அடித்தளம் இலங்கை தமிழர் பிரச்சினை

## "சோ" குற்றச்சாட்டு

தமிழக அரசியல் கட்சிகள் தமது வாக்கு பலத்தை அதிகரித்துக் கொள்வதற்காக இலங்கை பிரச்சினையை ஒரு தளமாக பயன் படுத்துவதாக துக்லக் பத்திரிகையின் ஆசிரியர் சோ தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்ற அரசியல் கட்சிகள் அனைத்தும் தமிழகத்தில் வாக்கு பலத்தை இழந்த கட்சிகள் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல்களில் பெரும் பின்னடைவை சந்தித்துள்ள கட்சிகள் தமது அரசியல் பலத்தை மீண்டும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கட்சிகள் பல்வேறு எத்தனிப்புக்களை மேற்கொள்கின்றன. இதற்காக இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை தளமாக பயன்படுத்துகின்றன.

இதன் அடிப்படையிலேயே வைகோ போன்றவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வருகைக்கும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் தனி ஈழம் அமைக்கும் தமிழக அரசியல் வாதிகளின் கனவு பகல் கனவு என்றும் இது உண்மையானது இல்லை என்றும் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு தமிழனும் இலங்கையரின் நிலை கண்டு கவலையடைகின்ற போதும் அரசியல் கட்சிகள் அதனைக் கொண்டு அரசியல் நடத்துவதாகவும் சோ குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கணனியின் செயற்றிறனை அதிகரிக்க




தொடர்ச்சியான கணனிப் பாவனையின் காரணமாக வன்தட்டில் பயனற்ற கோப்புக்களும் தற்காலிகமான கோப்புக்களும் அதிகளவில் தங்குகின்றன.

இதனால் வன்தட்டில் அநாவசியமான முறையில் மேலதிக இடம் பயன்படுத்தப்படுவதுடன் அதன் வேகம் குறைவடைவதனால் ஒட்டுமொத்தமாக கணனியின் செயற்றிறனும் குறைவடைகின்றது.

எனவே, இவ்வாறு அநாவசியமாகக் காணப்படும் பயனற்ற, தற்காலிக கோப்புக்களை சிறந்த முறையில் தேடி அவற்றை நீக்குவதற்கான வசதியை wise disk cleaner எனும் மென்பொருள் தருகின்றது.




இம்மென்பொருளானது அனைத்து வகையான தற்காலிக, பயனற்ற கோப்புக்கள் இருக்கும் இடங்களை விரைவாக தேடுவதுடன் அவற்றினை பாதுகாப்பான முறையில் நீக்குகின்றது.

இதனால் வன்தட்டில் மேலதிக இடம் அதிகரிக்கப்பட்டு அதன் செயற்படுவேகம் அதிகரித்து கணனியின் வினைத்திறனும் அதிகரிக்கின்றது.

இதைவிட இப்பிரச்சினைக்கு தீர்வாக Kerish doctor எனும் மென்பொருள் வெளியிடப்பட்டுள்ளது. இம்மென்பொருளானது விண்டோஸ் எக்ஸ்பி, விஸ்டா, விண்டோஸ் 7 ஆகிய இயங்குதளங்களைக்கொண்ட கணனிகளின் செயற்பாட்டை அதிகரிப்பதற்கு உதவியாகக் காணப்படுகின்றது.

இதன்மூலமும் கணனிகளில் காணப்படும் பாவனைக்கு உதவாத தற்காலிக கோப்புக்கள், Registry காணப்படும் உடனடிக் கோளாறுகள், முறையாக Uninstall செய்யப்படாத கோப்புக்கள் போன்றன சரிசெய்யப்படுகின்றன.

# உலகின் மிகச் சிறிய ஸ்கேனிங் கருவி கண்டுபிடிப்பு

கணனியின் மவுஸ் அளவே உள்ள ஸ்கேனிங் கருவியை கண்டுபிடித்துள்ளார் இங்கிலாந்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர். இங்கிலாந்தில் உள்ள நியூ கேசில் பல்கலையின் எலக்ரோனிக் இன்ஜினியரிங் துறைப்பேராசிரியர் ஜெப்நீஷம். இவரது தலைமையிலான குழு மலிவு விலை ஸ்கேனிங் கருவியை உருவாக்கியுள்ளது. இதுபற்றி அவர் கூறுகையில்,

வயிற்றில் இருக்கும் குழந்தை ஆரோக்கியமாக இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள ஸ்கேன் எடுக்கும் நடைமுறை உலகம் முழுவதும் இருக்கிறது.

பொதுவாக ஸ்கேனர் விலை ரூ.20 இலட்சம் முதல் ரூ.ஒரு கோடி வரை இருக்கிறது. விலை அதிகம் என்பதலால் கட்டணமும் அதிகம் வசூலிக்கிறார்கள்.

சிம்பிளாக நாமே ஒரு ஸ்கேனர் தயாரித்தால் என்ன என்ற எண்ணம் என் மனைவி முதன்முதலாக கர்ப்பமான போது உதித்தது.

ஒலி அலைகள் தொடர்பான சோனார் துறையில் எனக்கு இருந்த அறிவும் அனுபவமும் கைகொடுத்தது.

உடனடியாக அசெம்பிள் செய்து மினி ஸ்கேனரை உருவாக்கினேன். அதன் உதவியுடன் குழந்தையை ஸ்கேன் செய்து நானும் மனைவியும் டிவி திரையில் பார்த்து மகிழ்ந்தோம்.

சக ஆராய்ச்சியாளர்களுடன் சேர்ந்து அதில் சில மாற்றங்கள் செய்து மலிவு விலை ஸ்கேனரை உருவாக்கியுள்ளேன். இதை தயாரிக்க அதிகபட்சம் ரூ.3,500 தான் செலவானது. கணனி மவுஸ் சைஸ் மட்டுமே உள்ளது.

யுஎஸ்பி போர்ட் மூலம் அல்லது மடிக்கணனியில் இணைத்தால் குழந்தையின் அசைவை ஸ்கிரீனில் பார்க்கலாம்.

ஆணா, பெண்ணா என்பதை தெரிந்துகொள்ளும் அளவுக்கு தெளிவாக இல்லை. அதிக விலை ஸ்கேனர் கருவிக்கு நிகராக இதன் தரத்தை மேம்படுத்த முயற்சி செய்து வருகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# ஆங்கிலம் பயில உதவும் தளம்

ஆங்கில இலக்கணத்தை நாம் தமிழின் மூலம் எளிதில் அறிந்துகொள்ள உதவுகிறது Tmil Diction என்ற தளம்.

இந்த தளத்தை ஓபன் செய்ததும் aences/Dictionary கிளிக் செய்து Verb -ஐ தட்டச்சு செய்யவும்.

உங்களுக்கு உங்களுடைய Verb ஆனது Simple Tense, Continuous Tense, Perfect Tense, Perfect Continuous Tense என 12 மில்லியன் வார்த்தைகள் தொகுத்துள்ளார்கள். அடுத்து Principal Part of Verbs கிளிக் செய்ய Verb வகைகளை பட்டியலிட்டுள்ளார்கள்.

அடுத்துள்ள Simple Sentences,Proverb -ஐ கிளிக் செய்ய சுமார் ஆயிரம் வார்த்தைகளுக்கும் 300 பழமொழிகளுக்கும் தமிழ்–ஆங்கிலவிளக்கம் கொடுத்துள்ளார்கள்.

இதில் உள்ள சர்ச் பாக்ஸில் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்து அதற்கான பழமொழியை தமிழில் அறியலாம். தமிழில் தட்டச்சு செய்து அதற்கான பழமொழியை ஆங்கிலத்தில் அறியலாம்.

மொத்தத்தில் ஆங்கிலம் பயில விரும்புவோர்களுக்கு இந்த தளம் பனுள்ளதாக இருக்கும்.

இணையதள முகவரி
http://www.tamildiction.org/

# ஜிமெயிலின் பயனுள்ள வசதி



உலகில் பெரும்பாலான நபர்களால் பயன்படுத்தப்படும் மின்னஞ்சல் சேவையில் முதலிடம் வகிப்பது ஜிமெயில் ஆகும்.

விடுமுறைக்கு செல்லும் போது அல்லது முக்கிய கூட்டத்தில் இருக்கும் போது ஜிமெயிலை பார்வையிட்டால் உங்கள் கவனம் சிதறிவிடலாம்.

இதை தடுக்கவே உருவாக்கப்பட்டது Inbox Pause என்ற Chrome மற்றும் Firefox உலாவிகளில் கிடைக்கும் Extension.

இதை நிறுவியதும் Mail dropdown மெனுவில் pause அல்லது Unpause செய்ய வசதியாக பட்டன்கள் தோன்றும்.

மேலும் இன்பாக்ஸை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாக மற்றவர்களுக்கு Auto-Responder மூலம் தெரியப்படுத்தலாம்.

# Facebook Chat Instant Messenge

சமூகவலைத் தளங்களிலும் சரி, உலகில் காணப்படும் அனைத்து வகையான இணையத்தளங்களிலும் சரி முன்னணியில் திகழும் பேஸ்புக் ஆனது புதிய பயனர்களை தன்பக்கம் ஈர்க்கும் முகமாக அன்றாடம் புதிய புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தி வருகின்றது.

இவற்றின் அடிப்படையில் பேஸ்புக் இணையப் பக்கத்தில் உள்நுழையாமலே டெக்ஸ்டாப்பில் இருந்தவாறு நண்பர்களுடன் சட் செய்து மகிழ்வதற்காக Facebook Chat Instant Messenger எனும் சிறிய மென்பொருள் ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது. இவ்வசதியில் updte notification, sound alerts, cht history போன்ற அம்சங்களும் காணப்படுவதுடன் இலகுவான பயனர் இடைமுகத்தையும் கொண்டுள்ளது தவிர விண்டோஸ், லினக்ஸ், மெக் இயங்குதளங்களுக்கென தனித்தனியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# கோப்புக்களை இலகுவாக பரிமாற்றம் செய்வதற்கு

## Jumpshare

கணனியில் காணப்படும் கோப்புக்களை ஒன்லைன் மூலமாக நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளும் வசதியான மின்னஞ்சல் சேவையினை வழங்கும் நிறுவனங்கள் உட்பட வேறு சில இணையத்தளங்களும் தருகின்றன.


எனினும் மின்னஞ்சல்களினூடு சிறிய அளவுடை கோப்புக்களை மட்டுமே பகிர முடிவதுடன்.exe கோப்புக்களை பகிர முடியாது போன்ற குறைபாடுகள் காணப்படுகின்றன.

ஆனால்,Jumpshare இணையத்தளம் பெரிய அளவிலான கோப்புக்களையும் 150 இற்கும் மேற்பட்ட கோப்பு வகைகளையும் ஒன்லைனில் பகிர்ந்து கொள்ளும் வசதியினை தந்திருப்பதுடன் இலகுவாக drag and drop முறையில் கோப்புக்களை பகிர்ந்து கொள்ள முடியும்.

இதற்கென பிரத்தியேக மென்பொருட்களை நிறுவவோ அல்லது பயனர் கணக்குகளை உருவாக்கவோ தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# ஆடியோ எடிட்டிங்




பல்வேறு துறைகளையும் ஆக்கிரமித்து நிற்கும் கணனி மென்பொருட்கள் இசைத்துறையையும் தம் வசப்படுத்த தவறவில்லை. இதன் அடிப்படையில் பல்வேறு ஆடியோ எடிட்டிங் மென்பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதேபோன்று பதிகருவிக்ளின் உதவியுடன் பதிவு செய்யப்பட்ட ஆடியோக்களிலிருந்து உருவாகும் அநாவசியமான ஒலிகளை, குரல்களை நீக்குவதற்கு அல்லது குறைப்பதற்கு VocalZap மென்பொருள் பயனுள்ளதாக காணப்படுகின்றது.

இலகுவான பயனர் இடைமுகத்தினைக் கொண்டு முற்றிலும் இலவசமாகக் கிடைக்கக்கூடிய இம்மென்பொருளானது விண்டோஸ் மற்றும் iOS சாதனங்களில் செயற்படக் கூடியவாறு கிடைக்கின்றது.

# நோக்கியாவின் புதிய வரவு




கைப்பேசி உற்பத்திகளில் கதாநாயகனாகத் திகழும் நோக்கியா நிறுவனத்தின் புதிய வெளியீட்டில் Asha 311 எனும் கைப்பேசியானது தற்போது புதிதாக இணைந்துள்ளது.

கோர்னிங் கொரில்லா கிளாஸ் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதும் 3 அங்குல அளவினைக் கொண்டதுமான முழுமையான தொடுதிரை வசதியுடன் கூடிய இக்கைப்பேசியானது GSM, GPRS, EDGE ஆகிய வலையமைப்புக்களில் செயற்படக்கூடியதாகக் காணப்படுவதுடன் HSDPA 3G சமிக்ஞைகளை 14.4 Mbps வேகத்தில் உள்வாங்கக்கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் 1GHz வேகம் கொண்ட CPU,128MB அளவுடைய RAM ஆகியவற்றோடு 140MB வரையிலான உள்ளக மெமரியையும் உள்ளடக்கியுள்ளதுடன் microSD கார்ட் மூலம் நினைவக வசதியினை 32 GBவரை அதிகரிக்க முடியும். இவற்றுடன் 3.15 மெகாபிக்சல்கள் கொண்ட கமெரா, நோக்கியா உலாவி 2.0 போன்ற அம்சங்களும் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்தில் பிழையில்லை. ஆனால் தவறு என்று அறிந்து கொண்டபின், அதை திருத்திக்கொள் ளாதிருப்பது பெருந்தவறு. -காந்தியடிகள்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஆய்வாளர்கள் உதவுவார்கள் என நம்பும் ஆய்வுகூடத் தவளைகள் நாம்

வெளிநாட்டு தூதுவர்கள், இராஜதந்திரிகள் இலங்கைக்கும் வடபகுதிக்கும் அடிக்கடி விஜயம் செய்கின்றனர்.

போருக்குப் பின்பாக, வெளிநாட்டு இராஜ தந்திரிகளின் இலங்கைக்கான விஜயமும் வடபகுதிக்கான வருகையும் பல தடவைகள் இடம்பெற்றுள்ளன.

வெளிநாட்டு இராஜத்ந்திரிகளின் வருகையின் நோக்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வாதாரங்கள் பற்றி அறிந்துகொள்வது என்பதாக இருந்தால்,

போர் முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்தும் இன்னமும் அவர்களால் எங்கள் நிலைமைகளை உணர முடியவில்லையா? அல்லது எங்களுடைய அவல நிலை குறித்து அவர்களுக்கு தகுந்த முறையில் தெரியப்படுத்தவில்லையா என்பது புரியாத புதிராகவுள்ளது.

எதுவாயினும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு நாங்கள் ஆய்வுகூடத் தவளைகளாக இருக்கின்றோம் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

அதாவது நாங்கள் ஆய்வு கூடத்தவளைகள். அவர்கள் ஆய்வாளர்கள்.

அவர்களுக்கு எங்களைப்பற்றிக் கூறுகின்றவர்கள் ஆய்வு கூட உதவியாளர்கள்.

ஒருநாட்டிற்குள் இனத்துவரீதியில் போர் நடந்தால், போருக்குப் பின்பான சூழமைவு எப்படியாக இருக்கும் என்பதை ஆய்வாளர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.

இந்தக் கற்றல் என்பது கற்போனுக்கு–ஆய்வாளனுக்கு – அவர் சார்ந்த நாட்டுக்கு பயன்பாடுடையதே அன்றி ஆய்வு கூடத்தவளைக்கு அல்ல என்பது நினைவிற்கொள்ளத்தக்கது.

என்ன செய்வது? வெளிநாட்டிலிருந்து வந்திருக்கின்றவர்கள் எங்கள் காயங்களுக்கு ஔடதம் தருவார்கள் – அதனால்தான் அடிக்கடி அவர்கள் எங்களைப்பார்க்க – சோதிக்க வருகிறார்கள் என்று ஆய்வு கூடத்தவளைகள் நினைக்கின்றன.

ஆய்வு கூட உதவியாளர்களோ பாவங்கள். அவர்கள் தவளைகள் பற்றி கூறுவது போல வேறு எதையோ கதைக்கிறார்கள்.

இதை கதைப்பதில் அவர்களுக்குள் ஒரு வகையான புளுகுத்தனம் ஏற்படுகிறது. அத்தோடு தத்தம் நிகழ்ச்சி நிரல்களுக்கான உதவிகளை ஆய்வாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதும் ஆய்வுகூட உதவியாளர்களின் நோக்கம்.

ஓ! தவளைகள் பாவங்கள். வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தங்களை காப்பாற்ற வருகிறார்கள் என்று நம்புகிறார்கள். ஆய்வுகூட உதவியாளர்களே எங்கள் பிரதிநிதிகளாக இருந்து எங்கள் அவலங்களைக் கூறுவதாக நினைக்கிறார்கள். ஆனால் நடப்பதோ வேறு. இறைவா உன் சாபத்திற்கு உட்பட்வர்களா நாங்கள்? எங்களுக்கு மட்டும் ஏன் இப்படி?

அவர்களும் பிழை. எங்களவர்களும் பிழை. எப்படி நாம் காப்பாற்றப்படுவோம்? உன் கிருபையின்றி; ஆமென்.

# லலித்தும் குகனும் வடக்கில் காணாமல் போனோரின் விபரங்களை திரட்டினர்

## தந்தையும் மனைவியும் நீதிமன்றில் சாட்சியம்

கடந்த வருட சர்வதேச மனிதவுரிமைகள் தினத்திற்கு முன்னதாக யாழ்ப்பாணத்தில் காணாமல் போயிருந்த லலித்தும் குகனும் வடக்கில் காணாமல் போனவர்களினுடைய விபரங்களை திரட்டி வந்ததோடு நாம் இலங்கையர் என்ற அமைப்பின் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாக லலித்தின் தந்தையாரான ஆறுமுகம் வீரராஜ்யும் குகனின் மனைவி ஜனதாவும் யாழ். நீதிமன்றில் தெரிவித்தனர்.

லலித், குகன் காணாமல்போன வழக்கு விசாரணைகள் யாழ் நீதிமன்றில் நீதவான் பெ.சிவகுமார் முன்னிலையில் தொடர் விசாரணைக்காக நேற்று இரண்டாவது நாளாகவும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் குறித்த இருவரினதும் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்ட போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதில் குகனின் மனைவியான முருகானந்தன் ஜனதா சாட்சியமளிக்கையில்,

எனது கணவர் கடத்தப்படுவதற்கு முன்னைய காலங்களிலும் சிறை வாழ்க்கை அனுபவித்து 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் வைத்து விடுதலை செய்யப்பட்டார்.

யாழில் காணாமற் போனவர்களுடைய விபரங்கள் எடுத்துக்கொண்டிருந்த நிலையில் எனது கணவர் காணாமல் போயிருந்தார்.

எனது கணவர் காணாமல் போன சம்பவ தினமன்று இரவு 9 மணியளவில் எனது கணவரின் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ள முயற்சித்த போதும் அது நிறுத்தப்பட்டிருந்தது.

இதன்பின்னர் மறுநாள் 10ஆம் திகதி அச்சுவேலி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

அங்கு சிங்கள மொழியில்தான் முறைப்பாடு பதிவு செய்தார்கள். அவ்வாறு சிங்கள மொழியில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதன் பின்னர் தமிழில் எனக்கு விளக்கம் தரப்படவில்லை.

பின்னர் நான் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றபோது NPGP 7852 என்ற இலக்கமுடைய எனது கணவர் சென்ற மோட்டார்சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர் என்றார்.

லலித்தின் தந்தையாரான ஆறுமுகம் வீரராஜ் சாட்சியமளிக்கையில், எனது மகன் நாம் இலங்கையர் என்ற அமைப்பிலிருந்து அவ்வமைப்பு தொடர்பாக யாழில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததோடு ஜே.வி.பி கட்சி சம்பந்தமான மற்றும் மனிதவுரிமை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.

மகன் காணாமற்போன பின்னர் பொஸ்கம பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததோடு அதில் எமக்கு தொலைபேசி ஊடாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பாகவும் கூறினேன். இரு தொலைபேசி இலக்கங்களையும் பொலிஸாரிடம் கொடுத்தேன்.

பொஸ்கம பொலிஸாரிடம் வழங்கப்பட்ட வாக்குமூலம் எனது விருப்பப்படியே வழங்கப்பட்டதோடு அரசியல் இலாபத்திற்காக நான் வாக்குமூலத்தினை வழங்கவில்லை.

தனது தொலைபேசிக்கு லலித்தை யாழ்ப்பாணத்தைவிட்டு நீங்கள் எடுக்கிறீர்களா? அல்லது நாங்கள் எடுக்கவா எனமிரட்டல் விடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இருவரினதும் சாட்சியங்கள் தனித்தனியாக பதிவு செய்யப்பட்டதன் பின்னர் குறித்த வழக்கின் ஏனைய சாட்சியங்களை பதிவு செய்வதற்காக அடுத்தமாதம் 18ஆம் திகதி மீண்டும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இவ்வழக்கில் மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகளான கு.குருபரன், நுவான் போப்பகே ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி நிரான் அங்கிட்டல் ஆஜராகியிருந்தார்.

எதிர்த்தரப்பின் சார்பில் சட்டத்தரணி மகேஸ்விக்கிரமவும் சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அரச சட்டவாதி செகாண்டி சில்வாவும் ஆஜராகியிருந்தனர்.

மேலும் இவ்வழக்கில் அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஆகியோருக்கு, முன்னாள் யாழ்.நீதவான் மா. கணேசராசாவினால் ஏற்கனவே அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# சமூக சேவைகள் அமைச்சர் நாளை யாழ். வருவார்

(யாழ்ப்பாணம்)

சமூகசேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார் என அந்த அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வருகைதரும் அமைச்சர் பெரேரா அன்றையதினம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெறும் 70 வயதுக்கு மேற்பட்ட சமூர்த்தி பயனாளிகளுக்கான காசோலை வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

பிற்பகல் 2 மணியளவில் தென்மராட்சி பிரதேச செயலர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மாற்றுவலுவுடையோருக்கான வீட்டுத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவினைச் சேர்ந்த 5 பயனாளிகளுக்கும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஒரு பயனாளிக்கும் காசோலை வழங்கவுள்ளார்.

அதுமட்டுமன்றி சுயதொழில் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாற்றுவலுவுடைய 23 பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா பணமும் வழங்கவுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




எம்முடைய செயற்பாடுகளைச் செம்மையாகச் செய்வதற்கு எமது நெஞ்சம் ஒத்துழைக்கவேண்டும். நெஞ்சும் ஏனைய உறுப்புக்களும் ஒன்று சேர்ந்தால் மனிதனுடைய செயற்பாடுகள் ஒழுங்காக அமையும். வழிபாடு செய்வதற்கு இத்தகைய ஒன்றிணைப்பு இன்றியமையாதது. இறைவனுடைய மெய்யடியார்கள் இறைவனுடைய மலர்போன்ற இணையடிகளைப் பிரியாமல் வழிபடுவார்கள். அவர்கள் எல்லோரும் முன்னரேயே மெய்ம்மையான திருவடியின்பத்தைப் பெற்றவர்கள். இறைவன் திருவடிகளை *மலர் கொள் தாளினை* எனக்கூறுகிறார் மணிவாசகர். தாமரை ஒரு மென்மையான மலர். அந்த மலர்போன்ற மென்மையான திருவடிகளை அவர் நேரடியாகத் தரிசனம் செய்தவர். தலைமீது தீட்சைபெற்றபோது மலரின் மென்மையை அவர் உணர்ந்தார்.

இறைவன் *மாறிலாத மாக்கருணை வெள்ளம்* என மணிவாசகர் கூறுகிறார். இறைவன் கருணையே வடிவானவர் என்பதால் கருணைவெள்ளம் என்கிறார். அந்தக்கருணை குறைவதும் இல்லை. கூடுதலும் இல்லை. அதனால் மாறுதல் இல்லாதது. இறைவன் இன்னொரு குணமாக *ஈறிலா நீ* என்று வர்ணிக்கிறார். அழிவற்ற தன்மை இறைவனுடைய பெருமைக் குணமாகும். எளிமையாக வந்து எம்மை ஆட்கொள்ளவல்ல இறையை மணிவாசகர் நேரடியாகக் கண்டவர். அதை அவர் கூறும்போது சிறப்பான தொடர் ஒன்றைப் பயன்படுத்தியுள்ளார். திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலிலே தெய்வீக ஒளி திகழ மானுட வடிவில் ஞானாசாரியனாக எழுந்தருளிவந்த இறைவன் அவரை மானுடமாக நோக்கியதை அவரால் மறக்க முடியவில்லை. அதுவே அவர் பெற்ற நயன தீட்சையாகும்.

ஒருவரை ஒருவர் உற்று நோக்கும் போது இருவருக்குமான தொடர்பை மானுட நிலையில் விளங்கிக் கொள்ள முடியும். ஆனால் இங்கே இறைவனுடைய மானுட நோக்கு மணிவாசகரை முற்றாக மாற்றிய அருள்நோக்கு. மானிடரிடையேயும் இந்த அருள்நோக்கை மணிவாசகர் கண்டிருக்கிறார். ஓர் ஆசிரியரின் அருள் நோக்கு இதுவே. கல்விக் கொடையையும் அறிவாற்றலையும் வழங்கும் குருவின் பார்வை சீடரின் மனதைப் பக்குவப்படுத்தும் ஆற்றலுடையது. இதனாலேயே *எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்* என்ற பழமொழியும் பெருவழக்காகியுள்ளது.

இங்கே சாதாரணமான மானிட நோக்கிலிருந்து இறைவன் திரு நோக்கு வேறு பட்டதை மணிவாசகர் *ஒளி செய் மானிட நோக்கு* எனக்குறிப்பிடுவதன் மூலம் சிறப்பாக விளக்கியுள்ளார். இறைவன் அருள்நோக்கு ஒளி நிறைந் தது. ஊனக் கண்களால் அத்தெய்வீகஒளி நோக்கைக் காணும் போது மனமும் மெய்யும் பக்திவசப்பட்டுவிடும். ஆனால் மணிவாசகருடைய நெஞ்சம்மாறுபட்ட தாயுள்ளது. *கீறிலாத நெஞ்சுடையேன்* எனத் தன்னுடைய நெஞ்சத்தை அவர் குறிப்பிட்டுள்ளார். அவருடைய மனம் ஒடுங்காத மனம். அழிந்தொழியாத வன்


**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

நெஞ்சு. அதனால் *நாயினேன்* எனத் தன்மை இழித்துரைக்கின்றார்.

வ்லிய வந்து இறைவன் ஆட் கொண்ட போதும் அதை நெஞ்சம் கருத்திற் கொள்ளவில்லை. அது உலகியல் வயப்பட்டு மீண்டும் உண்டு உறங்கிவாழும் வாழ்வில் விருப்பம்கொண்டதால் நாயைப் போலக் கீழ்மையானவன் எனக் குறிப்பிட்டுள்ளார். இது எமக்கும் பொருந்தும் குண வியல்பாகும்.

*மாறிலாதமாக் கருணை வெள்ளமே*
*வந்து முந்திநின் மலர்கொள் தாளினை*
*வேறிலாப்பதப் பரிசு பெற்றநின்*
*மெய்ம்மை யன்பருள் மெய்ம்மை*
*மேவினார்*
*ஈறிலாத நீ எளியை யாகி வந்*
*தொளி செய் மானுட மாக நோக்கியும்*
*கீறிலாத நெஞ் சுடைய நாயினேன்*
*கடைய னாயினேன் பட்ட கீழ்மையே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அளவெட்டி மத்தி வி.க. கிரிக்கெட் போட்டி; ஞானம்ஸ் இறுதிப்போட்டிக்குத் தகுதி

(வேலணை)

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் மிகப்பிரமாண்டமாக நடத்தும் மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் மாபெரும் இறுதிப்போட்டிக்கு ஞானம்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது. நேற்று முன்தினம் புதன் கிழமை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற அரையிறுதிப்போட்டியில் ஞானம்ஸ் அணியும் வள்ளுவர் அணியும் மோதின.



முதலில் துடுப்பெடுத்தாடிய வள்ளுவர் அணி ஆரம்பத்தில் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. ஒரு கட்டத்தில் 5 ஓவர்களில் 53 ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட்டை இழந்திருந்தது. ஆனாலும் பின்வரிசை துடுப்பாட்டவீரர்கள் கைகொடுக்காததன் காரணமாக இறுதியில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அதிரடியாக ஆடிய ஜெசி 22 ஓட்டங்களையும் சுபா 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் குணசீலன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.65 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களமிறங்கிய ஞானம்ஸ் அணி துடுப்பாட்ட வீரர்கள் நிதானமாகவும் அதிரடியாகவும் ஆடி 7.2 ஓவர்களில் 2 விக்கெட்டை மாத்திரம் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டால் வெற்றிபெற்று மாபெரும் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றனர். துடுப்பாட்டத்தில் ரமேஸ் அதிரடியாக ஆடி ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களைப் பெற்றார். அனுரதன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சதீஸ், சாந்தன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

## வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் இடம் பெற்ற விளையாட்டுப்போட்டியில் வடமாகாணத்தில் யாழ்.மாவட்ட பாடசாலைகள் அதிகளவான விளையாட்டுக்களில் வெற்றியீட்டியுள்ளன.

**உதைபந்தாட்டம்**

19 வயதுக்குட்பட்டோர் ஆண்கள்- மன்னார் சென் சேவியர் கல்லூரி முதலாமிடம், மானிப்பாய் இந்துக் க்ல்லூரி இரண்டாமிடம்

15 வயதுக்குட்பட்ட ஆண்கள்-யாழ்ப்பாணம் சென் கென்றீஸ் கல்லூரி இரண்டாமிடம்

**கபடி**

19 வயதுக்குட்பட்ட பெண்கள்-யாழ்ப்பாணம் நெல்லியடி.மத்திய மகா வித்தியாலயம் முதலாமிடம்

15 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணி- வவுனியா பரகும் மகா வித்தியாலயம் மூன்றாமிடம்

**உடற்பயிற்சி**

19 வயதுக்குட்பட்ட ஆண்கள் - சென் அன்ரனீஸ் கல்லூரி யாழ்ப்பாணம், தீவகம் இரண்டாமிடம், யாழ்ப்பாணம் சென். கென்றீஸ் கல்லூரி மூன்றாமிடம்

19 வயதுக்குட்பட்ட பெண்கள்- வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி இரண்டாமிடம், யாழ்ப்பாணம் மானிப்பாய் பெண்கள் கல்லூரி மூன்றாமிடம் (266)

# இணுவில் இந்து வி.க. கிரிக்கெட் போட்டி; அருள் கல்வி நிலைய விளையாட்டுக் கழகம் வெற்றி

இணுவில் இந்து விளையாட்டுக்கழகத்தின் ஏழாவது ஆண்டு நிறைவையொட்டி நடத்திய 17 வயது பிரிவினர்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் அருள் கல்வி நிலைய விளையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதிப்போட்டியில் அருள் விளையாட்டுக் கழக அணியும் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய அருள் விளையாட்டுக்கழகம் 5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றது. இவ் அணி சார்பாக சர்மில் 10 ஓட்டங்கள், நிலுஜன் 17 ஓட்டங்கள், விதுரன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். எவரெஸ்ட் விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த எஸ்.தர்சன்,கதீசன், கே. தர்சன் ஆகியோர் முறையே 6,15,18 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

67 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் 4.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது.

அருள் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த விதுரன் 2ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சர்மில் 6 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். போட்டியின் ஆட்டநாயகனாக அருள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த விதுரன் தெரிவு செய்யப்பட்டார்.

# பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ரீதியான உதைபந்தாட்டம்; மானிப்பாய் இந்துக் கல்லூரி இரண்டாம் இடம்





இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான 2012ஆம் ஆண்டுக்கான தேசியமட்ட விளையாட்டுப்போட்டித் தொடர் இடம்பெற்று வருகின்றது. கடந்த 4 ஆண்டுகளாக உதைபந்தாட்டத்தில் சாதித்துவரும் மானிப்பாய் இந்து இவ்வருடமும் உதைபந்தாட்டத்தில் சாதித்தது. கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணத்தில் சாதித்து தேசிய மட்டத்திற்கு முன்னேறிய இவ் 19 வயதிற்குட்பட் அணி தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தினைத் தட்டிக்கொண்டது.2012ஆம் ஆண்டுக்கான தேசியமட்ட போட்டிகளின் முதலாவது சுற்றின் முதலாவது போட்டியில் அனுராதபுர மத்திய கல்லூரியினை எதிர்கொண்ட மானிப்பாய் இந்து 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் சென்.மேரிஸ் கல்லூரியை எதிர்கொண்டது மானிப்பாய் இந்து. அப்போட்டியிலும் 2:0 என்னும் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதியில் விளையாடும் சந்தர்ப்பத்தினைப்பெற்றது.மிக விறுவிறுப்பான காலிறுதி ஆட்டத்தில் கிண்ணியா முஸ்லிம் கல்லூரியினை 3:0 என்னும்கோல்கணக்கில்வென்று அரையிறுதிக் கான சந்தர்ப்பத்தினை மேலும் உறுதிப்படுத்தியது.அரையிறுதிப்போட்டியில் யாழ். மாவட்டத்தினைச்சேர்ந்த சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்கொண்ட மானிப்பாய் இந்து 5:1 என்னும் கோல்கணக்கில் மிக இலகுவான வெற்றியைப் பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.மிக எதிர்பார்க்கப்பட்டதும் முக்கியமானதுமான இறுதிப்போட்டியில் மன்னார் சென். சேவியர் கல்லூரியை எதிர்கொண்டது மானிப்பாய் இந்துக் கல்லூரி. இறுதிவரை போராடி யும் கோல் எதனையும் பெறமுடியாது 0:4 என்னும் கோல் அடிப்படையில் மன்னார் சென்.சேவியர் கல்லூரியிடம் போட்டியினை இழந்து தேசிய மட்டத்தின் இரண்டாம் இடத்தினைத் தட்டிச்சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாவேயை இலகுவாக வென்றது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்க-சிம்பாவே அணிகளுக்கு இடையிலான இருபது-20 போட்டியில் தென்னாபிரிக்க அணி 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

4-வது இருபது-20 உலகக்கிண்ணப் போட்டித் தொடரின் 4-வது போட்டி நேற்று இரவு அம்பாந்தோட்டை சர்வதேச விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இப்போட்டியில் சிம்பாவே அணி - தென்னாபிரிக்கா அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் எ.பி.டி.வில்லியர்ஸ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி தென்னாபிரிக்க வீரர்களின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது.

20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

அந்த அணியின் இரு வீரர்களை தவிர ஏனைய அனைவரும் ஒற்றை இலக்குடன் ஆட்டமிழந்தனர்.

அதிகபட்சமாக ஏர்வின் 37 ஓட்டங்களினையும் மட்சிகென்யரி 11 ஓட்டங்களினையும் எடுத்தனர்.



பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் கலீஸ் 4 ஓவர்கள் பந்துவீசி 1 ஓட்டம் அற்ற ஓவர் அடங்கலாக 15 ஓட்டங்களினை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் மோர்னி மோர்கல் 4 ஓவர்களில் 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், டேல் ஸ்ரெயின் 4 ஓவர்களில் 9 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும், அல்பி மோர்கல் 4 ஓவர்களில் 26 ஓட்டங்களினைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

94 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 12.4 ஓவர்களில் தனது வெற்றியிலக்கை அடைந்தது.

ஆரம்பவீரர்களான லேவி 43 பந்துகளில் 6 பவுண்டரிகள் உட்பட 50 ஓட்டங்களினையும், ஹசிம் அம்லா 33 பந்துகளில் 3 பவுண்டரிகள் உட்பட 32 ஓட்டங்களினையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக தென்னாபிரிக்க வீரர் ஜக் கலீஸ் தெரிவு செய்யப்பட்டார்.

**இன்றைய ஆட்டங்கள்**

பங்களாதேஷ் - நியூசிலாந்து
நேரம் : மாலை 3:30 மணிக்கு
Vs

ஆப்கானிஸ்தான் - இங்கிலாந்து
நேரம் : இரவு 7.30 மணிக்கு
Vs

# இந்திய அணியில் இன்னும் முன்னேற்றம் தேவை : தோனி

இலங்கையில் நடைபெற்று வரும் இருபது-20 உலகக் கிண்ணப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி ஆப்கானிஸ்தானை போராடி வென்றது.

முதலில் விளையாடிய இந்திய அணியால் 5 விக்கெட்டிழப்புக்கு 159 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. வீராட் ஹேலி 39 பந்தில் 4 பவுண்டரி 2 சிக்ஸர்களுடன் 50 ஓட்டங்களையும் ரெய்னா 33 பந்தில் 38 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பின்னர் விளையாடிய ஆப்கானிஸ்தான் 19.3 ஓவர்களில் 136 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்கையும் இழந்ததனால் இந்தியா 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.


ஆப்கானிஸ்தான் அணியில் முகமது 17 பந்துகளில் 31 ஓட்டங்களும் (2 பவுண்டரி, 2 சிக்ஸர்), கரீம் சாதீக் 26 ஓட்டங்களும் எடுத்தனர். எல்.பாலாஜி, யுவராஜ் சிங் தலா 3 விக்கெட்டுக்களையும் அஸ்வின் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்திய அணியால் கடைசி ஓவரில்தான் வெற்றிபெற முடிந்தது என்பது பரிதாபமே. கத்துக்குட்டி அணியான ஆப்கானிஸ்தானுக்கு எதிராக இந்திய வீரர்கள் பல சாதனைகள் படைத்து மிகப்பெரிய வெற்றியைப் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்திய வீரர்கள்திணறியே ஆப்கானிஸ்தானை வெல்ல முடிந்தது.

ஷேவாக் (10), காம்பீர் (8) ஆகியோரின் ஆட்டம் மிகவும் மோசமாக இருந்தது. இதே போல அணியின் முதன்மைப்பந்துவீச்சாளரான ஜாகீர்கானும் ஏமாற்றமளித்தார். அவர் மூன்று ஓவர் வீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து விக்கெட் எதையும் கைப்பற்ற இயலவில்லை.


இந்திய வீரர்களின் ஆட்டம் குறித்து அணித்தலைவர் தோனி அதிருப்தி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்றதும் மகிழ்ச்சியளிக்கிறது ஆனால் இது சிறந்தவெற்றியில்லை. வீரர்கள் திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. அனைத்து நிலையிலும் முன்னேற்றம் தேவை.

20ஓவர் போட்டியைப் பொறுத்தவரை எப்போதுமே இரு அணிகளுக்கும் வெற்றி வாய்ப்பு இருக்கும். எதிரணி துடுப்பாட்ட வீரருக்கோ அல்லது பந்துவீச்சாளர்களுக்கோ அன்றைய தினம் சிறப்பாக அமைந்து விட்டால் ஆட்டத்தின் முடிவில் மாற்றம் ஏற்படும்.



ஆப்கானிஸ்தானுக்கு எதிராக நாங்கள் சிறப்பாக ஆடவில்லையென்று தெரிவித்துள்ளார்.

# இந்திய தொடரில் பீட்டர்சன் புறக்கணிப்பு



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான பீட்டர்சன் இந்தியாவுக்கு எதிரான தொடரிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்து கிரிக்கெட் அணிவரும் நவம்பர் மாதம் இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளது.

அப்போது இந்தியாவிற்கெதிரான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், 2 இருபது-20 போட்டிகள் மற்றும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் ஆகியவற்றில் பங்கேற்க உள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நவம்பர் 15ஆம் திகதி தொடங்க உள்ளது. இந்நிலையில் இந்தியாவிற்கெதிரான டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்க உள்ள இங்கிலாந்து அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

இதில் இங்கிலாந்து அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் கெவின் பீட்டர்சனுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. தென்னாபிரிக்காவிற் கெதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் போது முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்டிராஸ் மற்றும் அணியின் பயிற்சியாளர் ஆன்டி பிளவருக்கெதிராக தவறான கருத்துக்கள் அடங்கிய செய்திகளை தென்னாபிரிக்க வீரர்களுக்கு பீட்டர்சன் அனுப்பினார்.

இதில் அதிருப்தி அடைந்த இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் தென்னாபிரிக்காவிற்கெதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியிலிருந்து பீட்டர்சனை நீக்கியது.

இதனால் பீட்டர்சனின் கிரிக்கெட் வாழ்க்கை முடிபடைந்தது என்ற செய்திகள் பரவியது. இந் நிலையில் தனது செயலுக்கு பீட்டர்சன் மன்னிப்பு கேட்டார்.

இருப்பினும் இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம், இந்தியாவிற்கு எதிரான அணியில் சேர்க்காமல் விட்டுள்ளது.

இதுகுறித்து புதிய தகவலொன்று வெளியாகியுள்ளது. இந்திய தொடருக்கான அணி தெரிவு செய்யப்படுவதற்கு முன் இங்கிலாந்து வாரியம் பீட்டர்சனை தொடர்பு கொண்டு 4 மாத ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு கேட்டு கொண்டதாகவும், அதேநேரம் இந்தியாவுக்கு எதிரான தொடரில் இடம்கொடுக்கப்படும் என வாரியம் உறுதி எதுவும் கொடுக்காததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் தான் பீட்டர்சன் அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளார். இதன் விளை[illegible] வாய்ப்பு மறுக்கப்பட்[illegible].

# ரொனால்டோவின் அதிரடியில் ரியல் மாட்ரிட் அபார வெற்றி



சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டித் தொடரில் ரியல் மாட்ரிட், மான்செஸ்டர் சிட்டி அணிகள் நேற்று முன்தினம் மோதின.

[illegible] விறுவிறுப்பாக அமைந்த இப் [illegible], இரு அணிகளும் 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தன.

இந்நிலையில் ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ அபாரமாக கோல் அடித்து ரியல் மாட்ரிட் அணிக்கு வெற்றியை வசப்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரணாப், மன்...

முதலில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியை அவரது மாளிகையில் சந்தித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

பிரணாப் முகர்ஜி அமைச்சர் என்ற முறையில் பலமுறை இலங்கைக்கு விஜயம் செய்து மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்திருந்தாலும், அவர் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் மகிந்த டில்லி வந்து பிரணாப் முகர்ஜியை சந்திப்பது இதுவே முதல்முறையாகும்.

இச் சந்திப்பின்போது பிரணாப் முகர்ஜிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்ட ஜனாதிபதி மகிந்த, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான நீண்ட கால உறவுகள் பாதிக்கப்படா வண்ணம் இரு நாடுகளும் செயற்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு பதிலளித்த பிரணாப் முகர்ஜி, இலங்கை யாத்திரிகர்கள் திருச்சியில் வைத்து தாக்கப்பட்டமைக்கு தமது கவலையைத் தெரிவித்ததுடன்,

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்பிலும் இருவரும் கலந்துரையாடினர்.

இதேவேளை, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையும் ஜனாதிபதி நேற்று இராப்போசன விருந்துடன் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இந்தியப் பிரதமர், இலங்கைத் தமிழர்களின் தற்போதைய நிலை குறித்து ஜனாதிபதி மகிந்தவிடம் கேட்டறிந்ததுடன்,

பல தசாப்தங்களாக நீடித்துச் செல்லும் இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றத்தை விரைந்து செயற்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி,

தமிழ் மக்களும் இலங்கையின் ஏனைய மக்களைப் போல வாழ்வதற்கான சகல உரிமைகளையும் நாங்கள் செய்து வருகிறோம் எனக் குறிப்பிட்டார்.

மேலும் இந்தியாவால கபிலவஸ்து கண காட்சிக்காக வழங்கப்பட்டமைக்கு தனது நன்றி களைத் தெரிவித்துக்கொண்டார்.

கபிலவஸ்துவை 3 மில்லியன் மக்கள் தரிசித்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-8)

## சாஞ்சியில் பௌத்த பல்கலை...

தொண்டர்களும் மத்திய பிரதேச எல்லையான பட்சிரோலி நகரை சென்றடைந்தபோது பாதுகாப்பு கருதி அங்கு ஏற்கெனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2000க்கும் அதிகமான பொலிஸார் அவர்களை மேலும் முன்னேற விடாமல் அங்கேயே தடுத்து நிறுத்தியுள்ளனர்.

நாங்கள் இந்தியக் குடிமக்களா இல்லையா? எங்களை தடுத்து நிறுத்திவிட்டு கொலைகாரன் ராஜபக்ஷவை வரவேற்கிறீர்களா? என்ற கோஷத்துடன் பொலிஸ் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட வைகோ, நடுவீதியில் அமர்ந்தபடியே தனது போராட்டத்தை இரவு முழுவதும் தொடர்ந்துள்ளார். இதனால் அப்பகுதியில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதேவேளை, வைகோவின் போராட்டத்துக்கு பட்சிரோலி பகுதி மக்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

விடியவிடிய மெழுகு வர்த்தி வெளிச்சத்தில் போராடிய வைகோ, சுட்டெரிக்கும் வெயிலிலும் போராட்டத்தை தொடர்ந்து வருகிறார்.

இதன்போது மத்திய பிரதேச முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌஹான், வைகோவைத் தொடர்புகொண்டு போராட்ட முடிவைக் கைவிட்டு திரும்பிச் செல்லுமாறு கோரிக்கை வைத்தார்.

நேற்றுக் காலையும் உயர் அதிகாரிகள் வந்து வைகோவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் வைகோ திரும்பிச் செல்வதில்லை என்று தெளிவாகக் கூறிவிட்டார்.

அப்போது ராஜபக்ஷவுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன. அசம்பாவித சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க அங்கு குவிக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான பொலிஸாரும் அவர்களுக்கு எதிரிலேயே அமர்ந்துள்ளனர்.

மத்திய பிரதேச முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌஹான், போபாலில் போராட்டம் நடத்திக்கொள்ளலாம் என்று தம்மிடம் கூறிவிட்டு, தற்போது எல்லையிலேயே தடுத்து நிறுத்தி விட்டதாகவும் வைகோ தெரிவித்தார்.

ராஜபக்ஷ இந்தியாவுக்கு வருவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

இதற்காக ஒரு உயிர்வேறு போயிருக்கிறது.

எங்களை தடுத்து நிறுத்தினாலும் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்றார்.

இதற்காக தாம் கைதாகவும் தயார் என வைகோ தெரிவித்தார். (ந-11)

## யாழின் தொழில்...

படித்துவிட்டு வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவதாகவும் தொடர்ந்து உதவிகளை செய்ய தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, யு.எஸ்.எயிட்டும் குடாநாட்டிலுள்ள தொழில்துறைகளை அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## முல்லைத்தீவில் ...

இடம்பெறும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் இலங்கையில் தங்கியுள்ள நிலையில் அவர்களும் சர்வதேச சமூகத்தினதும் கவனத்தை ஈர்க்கும் வகையில் கேப்பாபுலவு மக்களது மீள்குடியமர்வு மற்றும் சிங்கள குடியேற்றங்கள் என்பவற்றிற்கு எதிராகவும் மேற்கொள்ளப்படவுள்ள இப்போராட்டம் திட்டமிட்டவாறு மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

## மிகச் சவாலான...

பின்னர் தான், மன்மோகன் சிங்குடனான சந்திப்பு முடிபானது.

இவர்கள் இருவரும், 2010 யூன் மாதம் நடத்திய சந்திப்புக்குப் பின்னர் இரு தரப்பு சந்திப்புகள் இடம்பெறவில்லை.

இலங்கைக்கு வருமாறும் மகிந்த ராஜபக்ஷ கடந்த ஆண்டு ஆரம்பத்தில் விடுத்த அழைப்பை மன்மோகன் சிங் ஏற்றுக் கொண்டிருந்தார்.

இருந்தபோதிலும் 2008-ம் ஆண்டுக்குப் பின்னர், இந்தியப் பிரதமர் இலங்கைக்கு செல்லவில்லை.

2008ம் ஆண்டு பயணம்கூட அனைத்துலக மாநாடு ஒன்றுக்கானது தான்.

2009 மே மாதம் விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னர் பல்வேறு விவகாரங்களில், இந்தியாவும் இலங்கையும் ஒருமுக நிலைப்பாட்டில் இல்லை.

மன்மோகன் சிங்கின் பயணத்திற்கு முன்பாக, நல்லிணக்க விவகாரங்களில், குறிப்பாக தமிழர்களின் அரசியல் உரிமைகள் குறித்த விவகாரங்களில் கணிசமான முன்னேற்றம் தேவை என்கிறது இந்தியா.

இரு நாடுகளினதும் தலைவர்களுக்கு இடையில் தொடர்பாடல் இடைவெளி நிலவுகிறது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் மார்ச் கூட்டத் தொடரின் போதான வாக்கெடுப்பின்போதும் அதற்குப் பின்னருமான சூழல் அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

இரு நாடுகளினதும் மூத்த அதிகாரிகளது கலந்துரையாடல்கள்- வாக்கெடுப்பின்போது இந்தியா நடுநிலை வகிக்கும் அல்லது எதிர்க்கும் என்று ராஜபக்ஷ நம்புவதற்கு வழிவகுத்தது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை தீர்மானத் திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்ததற்கான காரணங்களை மன்மோகன் சிங் விளக்கியுள்ளபோதும்,

மகிந்த ராஜபக்ஷ அது ஒரு தவறு என்ற நிலைப்பாட்டிலேயே இன்னமும் இருக்கிறார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் பூகோள கால மீளாய்வின்போது இந்தியா இதற்குப் பரிகாரம் தேடும் என்று நம்புகிறார் அவர்.

ஆனால் உண்மையில் புதுடில்லியில் இருந்து அதற்கான அறிகுறிகள் வெளிப்படுவதற்கான அடிப்படைகள் இல்லை.

மூத்த இந்திய அதிகாரி ஒருவருடனான உரையாடலின் போது 2009 இல் இலங்கை கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றத் தவறியதே இந்தியா எதிர்த்து வாக்களிக்கக் காரணம் என்று தெளிவாகக் குறிப்பிட்டார் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ந-11)

## கூட்டமைப்பு-ஐ.நா ...

நிலங்களை இராணுவத் தேவைகளுக்காக கைப்பற்றுதல், அபிவிருத்திக்கு என கூறிக்கொண்டு பெரும்பான்மையின மக்களை குடியேற்றுதல், தமிழ் மக்களை அவர்களின் வழிபாட்டுத் தலங்களுக்கு போகவிடாது தடுத்தல், வடக்கு, கிழக்கில் சனத்தொகை விகிதாசாரத்தை மாற்றுதல், காணாமல்போதல், தடுப்பில் உள்ளோர், பொறுப்புக் கூறுதல், ஏற்புடைய அரசியல் தீர்வு போன்ற விடயங்கள் பற்றி இந்த சந்திப்பின் போது பேசப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கமானது, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தவுள்ளதா என்பது பற்றியும் ஐ.நா மனித உரிமைப் பேரவையின் மார்ச் 2012 தீர்மானம் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தை சுதந்திரமாக நடைபெற்றதாக த.தே. கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

## குடிநீர் விநியோக...

குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பிரதேச செயலகம் ஊடாகவும் பிரதேச சபை ஊடாகவும் இலவசமாக நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதுதவிர நீர்ப்பாசனத் திணைக்களத்தினாலும் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருப்பினும் இலவசமாக வழங்கப்படவில்லை.

இந்நிலையில் மாதம் ஒன்றுக்கு 10 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயிற்கு மேற்பட்ட தொகையை வேலணைப் பகுதி நீர் விநியோகத்திற்காக பிரதேச செயலகம் செலவிடுகிறது என பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## மகிந்தவின் வருகை...

மறியலால் சென்னையிலிருந்து திருச்சி சென்ற சோழன் விரைவு ரயில் சீர்காழி ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. சுமார் அரை மணி நேரத்திற்கு மேல் ரயில் நிறுத்தப்பட்டுள்ளதால் பயணிகள் அவதிப்பட்டனர்.

பின்னர் மறியலில் ஈடுபட்ட வேல்முருகன் உட்பட 2 ஆயிரம் பேரை காவல்துறையினர் கைது செய்தனர். (ந-11)


இதோ திசைகாட்டியின் மற்றுமோர் சமூக நோக்கோடு கூடிய கைங்கரியம்.
தற்போது எமது பிரதேசத்தில்

★ வர்த்தகர்கள் சிலர் பொருளாதார நெருக்குதல்களைச் சந்தித்து தலைமறைவாகி வருவதுடன் அவருடன் தொடர்பைக் கொண்ட ஏனைய வணிகர்கள் அவலத்திற்குள்ளாகின்றனர்.
★ பல சிறு வணிகர்கள் காசோலை மோசடி, இன்னும் கொடுக்கல் வாங்கல்களிற்காக நீதிமன்றங்களில் காணப்படுகின்றமை.
★ எம் பிரதேசத்தில் அளவு கடந்து காணப்படும் வங்கிகள், நிதி நிறுவனங்கள் போட்டா போட்டிக்கு அள்ளி வழங்கும் கடன்களால் ஏற்படும் அளவு கடந்த கடன் சுமையும்
★ பல பெரிய, சிறிய உற்பத்தி நிறுவனங்கள் தமது முகவர்களாக எம்மவர்களை ஆசை காட்டி உள்ளீர்த்து அவர்களுக்கு அளவு கடந்த இருப்பை வழங்கி எம் வணிகர்களை அவல நிலைக்கு உள்ளாக்குதல்.

இவை எல்லாம் தவறான நிதி முகாமையால் ஏற்படும் பிரச்சினைகளாகும்.

இதனால் காலத்தின் தேவை உணர்ந்து உங்கள்
திசைகாட்டி தனது இணை நிறுவனமாக
வணிக வழிகாட்டி
என்கின்ற முன்மாதிரியான வணிக ஆலோசனை நிறுவனம் ஒன்றை 20.09.2012 இல் திசைகாட்டியின் கூரையின் கீழ் ஆரம்பித்துள்ளது.

இங்கே வர்த்தகர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு இத்துறையின் விற்பன்னர்களால் வியாபார கணக்குப்பதிவு, நட்டங்களிலிருந்து பாதுகாப்பு, வருமானவரி தொடர்பான ஆலோசனை, வியாபார மேம்படுத்தலில் ஆலோசனை, கடன் பெறக்கூடிய வழிமுறைகள் பற்றிப் பிரஸ்தாபிப்பு, வியாபார பதிவு செய்தலில் வழிகாட்டல், கடன்களிலிருந்து மீள வழிவகுத்தல், முறையற்ற கொடுக்கல் வாங்கல்களில் சட்டரீதியான ஆலோசனை

இவை எல்லாவற்றையும் எழுத்து மூலம் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படும்

புதன் கிழமைகளில் விடுமுறையாகும்

தொடர்புகளுக்கு :- வணிக வழிகாட்டி
முன்மாதிரியான வணிக ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
இது திசைகாட்டி பிறைவேற் லிமிட் இன் இணை நிறுவனமாகும். (C-1102)



வீடு வாடகைக்கு
திருநெல்வேலி கிழக்கு இல.56, இராமலிங்கம் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0777242073



அனைவரும் சுயமாக வேலை செய்வதற்கான
Part Time வேலைவாய்ப்பு Full Time
உங்களது திறமைக்கு ஏற்ப
மாதம் ஒரு லட்சம்(Rs. 100,000/=)வரை
International Master Card, வேலை விளக்கம், CD, 100% உத்தரவாதம்.
இணையத்தின் மூலம் நவீன தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, வீட்டில் இருந்தவாறே
Data entry, Web Designing, Form filling, Face Book, Animation, Copy Typing, Print, Photoshop, C++, Java, Accounting,... உட்பட 300க்கும் மேற்பட்ட வேலைகள் உள்ளடக்கம். (463)
ONLINE JOBS
வெற்றியாளர்கள் விபரம் காரியாலயத்தில்
ACS
Kopay Center Kopay
Tel: 077-3967334/ 077-0071835 mail: acskopay@yahoo.com
கோப்பாய் அரசினர் வைத்தியசாலை சந்தியில் இருந்து 100 m தொலைவில்)



வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் சர்வதேச நிறுவனமான Optimo international மீண்டும் தனது புதிய கிளைக்கு 20 பேரை உள்வாங்கவுள்ளது. O/L, A/L வரை படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 6 மாத பயிற்சிக் காலத்தின்பின் 33000/= சம்பளம் வழங்கப்படும்.
முந்தும் 20 பேருக்கு பயிற்சிக் காலத்தில் சம்பளமும் இலவச தங்குமிட வசதியும் வழங்கப்படும். (464)
தொடர்புகளுக்கு: 0772151014, 0771518168, 0217212045



CIMA சாதனைச்சித்திகள் MCS இல்!
Foundation level 100%
F.M(67%), F.O(80%), P.O(70%), E.O(66%)
Schol. UK Reg Fee 15500/= free
Type <CM><Name> & Sms to 772395895
I.week days II.Sunday only
MCS IT CAMPUS 324, Palaly Road, Jaffna.
Supported by UNDP/JRRP For details 772 395 895 (சி-1103)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org